பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 14 சனிக்கிழமை 29.12.2018 கதிர் 54

**இனிது ரகசியம் அல்ல!**

தேர்தல்மூலம்தெரிவானவடக்கு மாகாணசபை காலாவதியாகிமூன்று மாதங்கள் கடந்துவிட்டன.

மாகாண ஆட்சிக் காலத்தில் நாளொருபேச்சு, தினசரிஒருசெய்தி என்று ஊடகங்களில் அடிபட்டுக் கொண்டிருந்த அப்போதைய முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரன் குறித்து பக்கம் 02

# பௌத்தத்துக்கே முன்னுரிமை ஒற்றையாட்சியும் நீடிக்கும்!

## மகாநாயக்க தேரர்களிடம் ரணில் உறுதியளிப்பு



கொழும்பு, டிசெம்பர் 30

அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றியமைக்கப்படாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவித்தார்.

இலங்கையில் ஒற்றையாட்சி முறைமை நீடிக்கும் எனவும் அவர் தெரிவித்தார். பக்கம் 11

## இடர் பாதித்த குடும்பங்களுக்கு உடனடியாக 10 ஆயிரம் ரூபா!



### பிரதமர் கிளிநொச்சியில் பணிப்பு

கிளிநொச்சி, டிசெ. 29

வடக்கு மாகாணத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 10 ஆயிரம் ரூபா நிதியை இழப்பீடாக உடனடியாக வழங்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சொத்து இழப்பு பக்கம் 11

## இடரால் பாதிப்புற்ற மக்களின் வங்கிக் கடன்களுக்குச் சலுகை

### பிரதமர் ரணில் உடன் நடவடிக்கை

கிளிநொச்சி, டிசெ. 29

வடக்கு மாகாணத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள் மற்றும் சிறு முயற்சிகளுக்கான கடன் பக்கம் 11

## 'ஒக்ரோபர் 26 சூழ்ச்சி' முழுவிவரம் விரைவில்

### பிரதமர் ரணில் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

நாட்டை 50 நாள்களுக்கு மேலாக நாசமாக்கிய 'ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி'யின் முழு விவரத்தை விரைவில் வெளியிடவுள்ளேன். பக்கம் 02

## ஹெலியில் சுற்றிய ரணில்



கிளிநொச்சி, டிசெ. 29

வடக்கு மாகாணத்தில் எற்பட்டுள்ள வெள்ள இடர் பாதிப்புக்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பக்கம் 11

## வெள்ளம் ஏற்படுத்திய துன்பத்திலிருந்து வன்னி மக்களை விரைவாக மீட்போம்!

### கிளிநொச்சியில் ரணில் உறுதிமொழி



கிளிநொச்சி, டிசெ. 29

வறுமையில் முன்னணியில் இருந்த கிளிநொச்சி, முல்லைத்தீவுமாவட்டங்களை வெள்ளம் மீண்டும் துன்பப் படுத்தியுள்ளது என பிரதமர் ரணில் விக் பக்கம் 02

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு இன்று நள்ளிரவு வெளிவரும்

கொழும்பு, டிசெ. 29

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் வெளியிடப்படும் எனப் பக்கம் 11

## இடைத்தங்கல் முகாம்களையும் நேரில் பார்வையிட்டார் ரணில்



கிளிநொச்சி, டிசெ. 29

கிளிநொச்சிக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெள்ள பக்கம் 11

## இடரால் பாதிப்புற்றோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 20 ஆயிரமாக உயர்ந்தது

யாழ்ப்பாணம், டிசெ. 29

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால், 38ஆயிரத்து 739 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 962 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித் பக்கம் 11

## மீண்டும் ஜனாதிபதியாவதற்கு கனவு காணக்கூடாது மைத்திரி

### சம்பிக்க ரணவக்க காட்டம்

கொழும்பு, டிசெ. 29

மஹிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து அரசியல் சூழ்ச்சி ஊடாக நாட்டைச் சீரழித்துவிட்டார் பக்கம் 11



## பாதிக்கப்பட்ட மக்களுக்கு 25 ஆயிரம் ரூபா வேண்டும்

### பிரதமரிடம் டக்ளஸ் எம்.பி கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ. 29

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட குடும் பக்கம் 11

## இரணைமடு விசாரணைக்கு மூவரடங்கிய குழு நியமனம்

கிளிநொச்சி, டிசெ. 29

இரணைமடுக் குளம் தாமதமாகத் திறக்கப்பட்டமை தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள மூவர் அடங்கிய குழுவை பக்கம் 11

# மன்னார் புதைகுழி எச்சங்களை ஆய்வு செய்வதற்கு உதவுவோம்

## காணாமற்போனோர் செயலகம் அறிவிப்பு

மன்னாரில் மனிதப் புதைகுழியிலுள்ள எச்சங்களை ஆய்வு செய்வதற்கு காணாமற்போனோர் செயலகம் உதவும் என அந்த அலுவலகத்தின் தலை வர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உண்மையை நிலைநிறுத்துவதிலும் ஆள்கள் காணாமல் ஆக்கப்பட்ட சூழ்நிலைகளை உறுதிப் படுத்துவதற்கும், அவர்களுக்கேற்பட்ட நிலையை அறிவதிலும் காணாமற்போனோர் செயலகத் தின் அர்ப்பணிப்பு தொடர்கிறது.

மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து அகழ்ந் தெடுக்கப்படும் எச்சங்களைப் புலனாய்வு செய்வதற் குக் காணாமற்போனோர் செயலகம் உதவுவது தவிர்க்க முடியாததாகும்.

2018 ஜுலை மாதம் முதல் காணாமற்போனோர் செயலகம் இந்த அகழ்வாராய்ச்சிக் குழுவின் உணவு, தங்குமிட வசதி ஆகியவற்றுக்கான நிதியை வழங்குகிறது.

அத்தோடு புதைகுழிக்கு மேலாக தார்ப்பாய் துணி விரித்து அந்த நிலம் பருவகால மழையினால் பாதிக்கப்படாமலிருப்பதை உறுதிப்படுத்தியுள் ளது.

இப்பணிகளில் உயர்ந்த தரத்தை உறுதிப்படுத்தி புலனாய்வு முன்னெடுப்பில் பொதுமக்கள் நம் பிக்கையை நிச்சயப்படுத்திக் கொள்ளும் அவசியத்தை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந் துள்ளோம்–என்றார். (ஐ)

# நாடாளுமன்றில் குழப்பம்: 400 பேரிடம் விசாரணை

கொழும்பு, டிசெ. 29

நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற குழப்பநிலை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 400 பேரிடம் விசாரணை மேற்கொள் ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்வுக் குழுவினரை பொலிஸார் நேற்று முன் தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி யில் சந்தித்தபோதே இதுகுறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் ஏற்கனவே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், சம்பவத்தின்போது மன்றில் இருந்த நாடாளுமன்ற ஊழியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

# சிங்களவர்களின் மனதை வென்றுள்ளார்கள் தமிழர்!

## அமைச்சர் ராஜித கூறுகிறார்



ஒக்டோபர் – 26 அரசியல் சூழ்ச்சியின்போது தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் ஓரணியில் செயற்பட் டார்கள். தமிழர்கள் தமது ஒற்று மையின் மூலம் சிங்கள மக்களின் மனங்களை வென்றுள்ளனர்.

– இவ்வாறு சுகாதார அமைச் சர் ராஜித சேனாரத்ன தெரிவித் தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்–

தமிழர்கள் தங்கள் ஒற்றுமை யின் ஊடாக தெற்கில் உள்ள சிங்களவர்களின் மனதை வென் றுள்ளார்கள்.

தமிழர்களின் இந்த ஒற்றுமை தொடர்ந்தால் தேசிய இனப் பிரச் சினைக்கு நாம் விரைவில் அர சியல் தீர்வைக் கண்டுவிடலாம்.

எந்தத் தடைகள் வந்தாலும் புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வை இந்த அரசு அடைந்தே தீரும் – என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது செய்திகள் வெளிவரு வது குறைவு.

அதற்காக அவர் சும்மா இருந் தார், இருக்கின்றார் என்று அர்த்த மல்ல.

தமது தமிழ் மக்கள் கூட்ட ணியை உருவாக்கும் பூர்வாங்கப் பணியில் அவர் படு 'பிஸி'.

புதிய கட்சியின் யாப்புத் தயார். நீண்ட ஆய்வுகள், கலந்துரையா டல்களுக்கு மத்தியில் அவர் அதனைத் தயாரித்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிலையில் செயற்படாமல் இருக்கும் தென் னிலங்கைக் கட்சி ஒன்றை விலைக்கு வேண்டி, அதனை 'தமிழ் மக்கள் கூட்டணி' என்று பெயர் மாற்றி, பதிவு செய்யப்பட்ட கட்சியாக அதை இயக்கலாம் என்ற ஒரு யோசனை அவர் முன் வைக்கப்பட்டது. அதை அவர் நன்கு பரிசீலித்துள்ளனர்.

அப்படி ஒரு கட்சியை விலைக்கு வாங்கி, விக்னேஸ்வரனிடம் கைய ளிப்பதற்கு சில வெளிநாட்டுத் தரப்புகள் தயாராம். ஆனால் அதற்காக பல மில்லியன்களை செலவிடும் திட்டத்துக்கு உடன்பட நீதியரசர் மறுக்கின்றார் எனத் தெரிகின்றது. அதனால் பதிவுசெய் யப்பட்ட ஒன்றாக கட்சியை மாற் றுவதில் நெருக்கடிகளை எதிர் கொள்கின்றார் அவர் எனத் தெரி கின்றது.

தப்பித் தவறி மாகாண சபைத் தேர்தல் முதலில் அறிவிக்கப்பட் டால், கூட்டமைப்பு தனது முதல் வர் வேட்பாளர் யார் என்பதற்கு சிண்டைப் பிடித்துக் கொண்டு சண்டை பிடிக்கும் நிலையே உள் ளது.

வழமை போல, முதல்வர் கன வில் இருக்கும் மாவை சேனாதிராசா தனது பெயரைப் பரிந்துரைக்கு மாறு ஓர் ஆதரவாளர் வட்டத்தைத் தூண்டிவிட, விடயம் விவகாரமா கும். மேலும் பல பெயர்கள் கூட் டமைப்பில் அடிபடுகின்றன.

ஆனால் தமிழ் மக்கள் கூட் டணியில் அந்தச் சிக்கல் இல்லை. முன்னாள் முதல்வரே வரும் தேர்தலிலும் முதல்வர் வேட்பாளர்.

இன்றைய சூழலில் கள நிலைமை தமக்குப் பெரிதும் சாத கமாக இருக்கின்றது எனக் கருது கின்றார் விக்னேஸ்வரன்.

ஆனால் தேர்தல் எப்போது வரும் என்பதுதான் கேள்வி.

இயன்ற விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி விட வேண்டும் என்பதற்கான காய் நகர்த்தல்களை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய மும்முரமாக ஆரம்பித்தி ருக்கின்றார் என்று மிக மிக நம்ப கரமாக அறிய வந்தது.

மாகாண சபைத் தேர்தல் ஏற் கனவே வருடக் கணக்கில் பிந்தி விட்டது. அதை நடத்துவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளைச் செய்வதில் ஆட்சித் தரப்புக்கு ஈடுபாடு இல்லை என்பது வெளிப் படையானது.

இந்தப் பின்புலத்தில் தேர்தலை நடத்தாமல் வெறுமனே பார்த்துக் கொண்டு இருப்பதுதான் தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் கட மையா என்று அவர் சிந்திக்கிறார் எனத் தெரிகின்றது.

இலங்கையின் அரசியல் சரித் திரத்தையே புரட்டிப் போட்ட அண்மைக்கால உயர்நீதிமன்றத் தீர்ப்புகளுக்குக் காரணமான ஜனாதி பதி சட்டத்தரணி ஒருவருடன் அவர் ஆலோசனை கலந்திருக் கின்றார் என்று தெரிகின்றது.

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன் வராவிட்டால், பிறக்கும் ஜனவரி மாதத்தில் இந்த விடயத்தை அவர் தாமே உயர்நீதிமன்றுக்குக் கொண்டு செல்வார் எனத் தெரி கின்றது.

சரி. அப்படி அவர் உயர்நீதி மன்றத்தின் கவனத்துக்கு விடயத் தைக் கொண்டு போனால், இது விவகாரத்தில் தேவையான சட் டத்தை – மாகாண சபைத் தேர் தலை நடத்துவதற்கான புதிய சட்டத்தை – உருவாக்கும்படி உயர் நீதிமன்றம் சட்டமாக்கும் சபையான நாடாளுமன்றத்துக்கு உத்தரவிட முடியுமா? நாடாளுமன்றம் இப் படித்தான் செயற்பட வேண்டும், இன்ன சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றெல்லாம் நீதிமன் றம் தலையிட்டு வழிகாட்ட முடி யுமா? – என்றெல்லாம் கேள்வி எழுகின்றது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆலோசனை கலந்த அதே ஜனாதிபதி சட்டத்தரணியிடம் இந்தக் கேள்வியைக் கேட்டேன்.

*"ஆம். மட்டுப்படுத்தப்பட்ட சில விடயங்களில் நீதிமன்றம் தலை யிட வாய்ப்பும், இடமும் உண்டு."* – என்றார் அவர்.

*"சில விடயங்கள் அவிழ்க்க முடி யாத முடிச்சுகள் (Gordian knot) என்ற வகையறாவைச் சேர்ந் தவை.*

*"இப்போது மாகாண சபைத் தேர்தலும் அவ்வாறு அவிழ்க்க முடியாத விவகாரமாகச் சிக்குண் டுள்ளது. பழைய தேர்தல் சட்டத்தை நீக்கும் விதத்தில் சட்டத் திருத்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கினால் நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆகை யினால் அந்தச் சட்டம் செய விழந்துவிட்டது. புதிய சட்டம் கொண்டு வரப்படவில்லை. கொண்டு வருவதற்கான இணக் கமும் நாடாளுமன்றத்தில் இல்லை. அதற்காகத் தேர்தல்களை நடத் தாமல் வருடக் கணக்காகப் பார்த் துக் கொண்டிருக்க முடியாது. இது அவிழ்க்க முடியாத சிக்கலான விடயம். தேசியப் பிரச்சினை. இத்தகைய அவிழ்க்க முடியாத சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற் காக தனக்குத் தானே உயர்நீதி மன்றம் சில அதிகாரங்களை எடுத்து வழிகாட்டல்களை வழங்க முடியும். பழைய தேர்தல் முறை யின் கீழ் மாகாண சபைத் தேர்தல் களை நடத்துவதற்கான உத்த ரவை நீதிமன்றம் விடுப்பதற்கு சாத்தியமும் இடமும் உண்டு"* – என்றார் அந்த சிரேஷ்ட சட்டத் தரணி.

அவரின் கருத்துப்படி பார்த் தால் –

தனித்துவமாகவும், பக்கம் சாராமலும், துணிச்சலான – முன் மாதிரியான – முடிவுகளை எடுக் கும் விதத்திலும், பிரத்தியேகமா கவும் செயற்படும் ஓர் உயர்நீதி மன்ற ஆயத்தை நாடு இப்போது கொண்டிருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலை இனியும் தாமதிக்காமல் நடத்து வதற்கான விசேட – உத்தரவு – பணிப்புரை – வழிகாட்டல் – இந்த உயர்நீதிமன்றத்திடமிருந்து வரு வதற்கு அதிக சாத்தியங்கள் உள் ளன.

அதுதான் நிலைமை என்றால் பிறக்கும் புத்தாண்டு தேர்தல் ஆண் டாக மலரும்.

ஆரம்பத்தில் மாகாண சபைத் தேர்தல். அந்த ஆண்டில் நவம்பர் மாதம் அளவில் ஜனாதிபதித் தேர்தல். இரண்டுக்கும் நடுவில் அல்லது ஜனாதிபதித் தேர்தலை அடுத்து பொதுத் தேர்தல்.

–இப்படி மீண்டும் வாக்கா ளர்களைத் தேடி அரசியல்வாதி கள் படையெடுக்கும் காலம் நெருங்கி வருகின்றது போலும்.

- மின்னல் -

## ஒக்ரோபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு அதிரடியாகத் தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

வெளிநாட்டுச் செய்தி நிறு வனத்தின் இலங்கைச் செய்தி யாளருக்கு வழங்கிய நேர்காண லிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:–

இந்த அரசியல் சூழ்ச்சியுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மட்டும் தொடர்புபடவில்லை. ராஜபக் ஷவின் முழுக் குடும்பமும் மைத் திரியின் முழுக் குடும்பமும் தொடர்புபட்டுள்ளது.

இந்தச் சதித் திட்டத்துடன் ஊடாக அவர்கள் ஒவ்வொரு வரும் என்னென்ன பதவிகளுக்கு ஆசைப்பட்டுள்ளார்கள் என்ற விவரத்தையும் நான் வெளியிட வுள்ளேன். அவர்களின் இந்தச் சதிக்குத் துணைபோன கறுப்பு ஊடகங்களின் பெயர்களையும் வெளியிடவுள்ளேன்.

மஹிந்த அணியைச் சேர்ந்த சுமார் 40 நாடாளுமன்ற உறுப் பினர்கள் இந்த அரசியல் சூழ்ச்சி யுடன் நேரடியாகத் தொடர்புபட் டுள்ளார்கள். அவர்களின் விவரங் களையும் வெளியிடவுள்ளேன்.

எமது கட்சியின் (ஐக்கிய தேசி யக் கட்சி) உறுப்பினர்கள் சிலரும் இந்த அரசியல் சூழ்ச்சிக்குள் சிக் குண்டு மயிரிழையில் தப்பியுள் ளனர். கட்சியின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு அவர்களின் விவரங்களை வெளியிட மாட்டேன்.

இந்த அரசியல் சூழ்ச்சியை முடிவுக்குக் கொண்டுவர எமது ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர் களும், இரா.சம்பந்தன் தலை மையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கடினமாக – அச்சுறுத்தல்களுக்கு மத்தி யில் உழைத்தார்கள்.

நீதித்துறையில் அவர்கள் நம்பிக்கை வைத்து செயற்பட் டார்கள். அவர்களின் எண்ணத் தின்படி நாம் வெற்றியடைந் தோம். நாம் எதிர்பார்த்த மாதிரி சர்வாதிகாரம் தோற்கடிக்கப்பட்டு ஜனநாயகம் வென்றது.

இனிமேலும் இந்த அரசியல் சூழ்ச்சிக்கு நாம் இடமளிக்கமாட் டோம். எமது ஒவ்வொரு நடவடிக் கைகளும் அவதானமாக இருக் கும் – என்றார். (ஐ)

## வெள்ளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தத் துன்பத்திலிருந்து அவர்களை மீட்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசு விரைந்து எடுக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

வெள்ள இடர் தொடர்பில் நேற்று கிளிநொச்சி மாவட்ட செய லகத்தில் நடந்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரி விக்கையில் –

கடந்த வாரத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட பாரிய வெள்ளம் காரண மாக சுமார் 38 ஆயிரம் குடும்பங் கள் பாதிக்கப்பட்டுள்ளன. வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயம் மற்றும் சிறு வர்த்தகங்கள் சுய தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் பொருளாதார நிலையில் பின்னணியில் உள்ள இரண்டு மாவட்டங்களாகும். அதனால் இந்த வெள்ளம் அவர் களை மிகவும் பாதித்துள்ளது. எனவே இவர்களுக்கான உதவி களை வழங்கி அபிவிருத்தியை மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்க் கிறோம்.

வெள்ளம் தொடர்பான ஆபத்து இன்னும் குறையவில்லை. ஆகவே நாம் அனைவரும் அவ தானமாக இருக்க வேண்டும். இரண்டு வாரங்களுக்குள் வெள் ளத்தால் வீடுகள் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும ான பத்தாயிரம் ரூபா வழங்கப் படும் அதனைவிட தறப்பாள் மற்றும் கூரைத்தகடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கிறோம். சுகா தாரம் தொடர்பிலும் கவனம் செலுத்துகிறோம். சில மாதங் களுக்கு நுண்கடன் சேகரிப்பவர் களைத் தடை செய்கிறோம். அதே போன்று வங்கிக் கொடுப்பனவு கள் தொடர்பிலும் ஆராய்கிறோம். விசேடமாக நீர் இறைக்கும் இயந் திரங்கள் வழங்குகிறோம்.

விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கால்நடை கள் இறந்துள்ளன. வியாபார நிலையங்கள் பாதிக்கப்பட்டுள் ளன. இவற்றைக் கட்டியெழுப்ப உதவவுள்ளோம்.

வீடு மற்றும் சொத்து இழப் புக்களுக்குக் காப்புறுதியூடாக இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கிறோம். பிரதான பிரச்சினை யாக வீதிகள் பாதிக்கப்பட்டுள் ளன. இதற்கு பிரதேச சபைகள் ஊடாக மதிப்பீடுகள் பெற்று அவற்றைப் புனரமைப்போம்.

இதனைவிட வீடமைப்பு மற் றும் சுகாதார அமைச்சர் உள் ளிட்டவர்கள் இங்கு வருகின்றனர். ஏனையவர்களும் வருவார்கள். விவசாய அமைச்சரையும் நான் சந்திப்பேன். அவரை இங்கு அனுப்புகிறேன். அதனைவிட எனது அமைச்சின் செயலாளரும் இடையிடையே இங்கு வருவார். கொழும்பிலும் இது தொடர்பில் அமைச்சர்களுடன் கலந்துரை யாடுவோம் – என்றார். (ஐ)

# தெஹிவளை பொலிஸ் பதிவு உடனடியாக நிறுத்தப்படும்

## அமைச்சர் மனோ அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 29

கொழும்பு மாவட்டத்தில், தெஹிவளைப் பொலிஸ் வலயத்தில் குடியிருப்பாளர் பதிவை உடன் நிறுத்த நிலையப் பொறுப்பதிகாரி பிரதீப் கிரிஷாந்தவுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இனி அங்கு பதிவு நடவடிக்கைகள் நடைபெறாது. சிங்களத்திலோ, தமிழிலோ எந்த மொழியில் படிவங்கள் வந்தாலும் படிவங்களை எந்த மொழியிலும் நிரப்பிக் கொடுக்க வேண்டாம்.

இதை மீறிப் பொலிஸ் அதிகாரிகள் உங்கள் இருப்பிடங்களுக்கு வருவார்களாயின், 077312770 என்ற இலக்கத்துக்கு குறும்செய்தி அனுப்பி, விவரத்துடன் என்னிடம் முறைப்பாடு செய்யுங்கள் – என்றார்.

# யாழ்ப்பாணத்தில் டெங்குச் சோதனை; 17 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். மாநகர சபை எல்லைக்குள் 672 இடங்கள் டெங்கு பெருகுவதற்கு ஏதுவான சூழலாக இனம் காணப்பட்டுள்ளன.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்த நிலையில் கடந்த வியாழக்கிழமை 947 இடங்களில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்.பிரேதச செயலகம், டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு , சுகாதாரத் திணைக்களம், பொலிஸார் , பிராந்திய சுகாதர வைத்திய அதிகாரிகள் , ஊழியர்கள் உள்ளிட்டோர் இந்தச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது 947 இடங்களைச் சோதனையிட்டதில், 672 இடங்களில் டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழல்கள் காணப்பட்டுள்ளன. இதனையடுத்து அத்தகைய இடங்களை உனடியாகத் துப்பரவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன் 25 இடங்களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதால். 17 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் எதிர்வரும் நாட்களிலும் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மழை குறைவடையும்

நாட்டில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை இன்றிலிருந்து தற்காலிகமாகச் சற்று குறைவடையலாம் என இலங்கை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் எனவும், எனினும் இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான காலநிலை எதிர் பார்க்கலாம் எனவும் இலங்கை வானிலை ஆய்வு மையம் சுட்டிக் காட்டியுள்ளது.

# பிரதமரின் பதாகை சேதம்



கொழும்பு, டிசெ. 29

நாவலப்பிட்டி நகரில் வைக்கப்பட்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதாகையை, இனந்தெரியாத நபர்கள் சேதப்படுத்தியுள்ளனர் என்று, நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிய பிரதமரை வரவேற்கும் வகையில் நாவலப்பிட்டி நகர சபையின் அனுமதியுடன் நகரில் வைக்கப்பட்டிருந்த பதாகைக்கே இவ்வாறு சேதம் விளைவிக்கப்பட்டுளதென நகரசபைத் தலைவர் சசங்க சம்பத்சஞ்சே பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என்றும், நகரிலுள்ள வியாபார நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி.வி. உதவியுடன் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மக்களுக்குப் பயன்படாத அமைச்சுப் பதவி எதற்கு?

## கேட்கிறார் ராதாகிருஷ்ணன்

கொழும்பு, டிசெ. 29

மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய வகையில் அமைச்சு ஒன்று கிடைக்காத பட்சத்தில் தான் அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதி தலைவருமான நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரதமர் எனக்கு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு ஒன்றையும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாருக்குப் பிரதி அமைச்சுப் பதவி ஒன்றையும் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். அதனை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். ஆனால் தற்போது அது தொடர்பில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. எனக்கு ஏதோ ஒரு புதிய அமைச்சை உருவாக்கித் தருவதற்கு முயற்சி செய்து வருகிறார். பிரதி அமைச்சு தொடர்பிலும் எந்தவிதமான காத்திரமான ஒரு முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

எனவே சேவை செய்ய முடியாத ஒரு அமைச்சை ஏற்பதைவிட ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதே சிறந்தது – என்றார். (ஐ)

# ஆறு வயதுச் சிறுவனுக்கு சூடு வைத்த தாய் கைது

கொழும்பு, டிசெ. 29

ஆறு வயதுச் சிறுவனுக்குச் சூடு வைத்துக் குற்றச்சாட்டில், அந்தச் சிறுவனின் தாயை, மாத்தளைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

மாத்தளை உக்குவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயது பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தீக்காயங்களுக்கு உள்ளான சிறுவன் சிகிச்சைக்காக மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கட்டணங்களைக் குறைக்காத பஸ்கள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 29

பஸ் கட்டணங்களைக் குறைக்காத பஸ் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் எச்சரித்துள்ளார்.

அதற்கமையக் கட்டணங்களைக் குறைக்காத பஸ்கள் தொடர்பில் 0112 860 860 என்ற தொலைப்பேசி இலக்கத்துக்கு அழைத்து முறைப்பாடு செய்யுமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை குறைப்பைத் தொடர்ந்து பஸ் கட்டணங்கள் 4 வீதத்தால் குறைக்கப்பட்டன.

எனினும், சில பஸ் உரிமையாளர்கள் கட்டணங்களைக் குறைக்காத நிலையில், அது தொடர்பில் இதுவரை 23 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதுக்கடை நீதிமன்றம் அருகே துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 29

புதுக்கடை நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகில் நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சந்தேகநபரிடமிருந்து 5 துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் கைது செய்யப்பட்ட இந்த நபர் மட்டக்குளிப் பகுதியைச் சேர்ந்த 48 வயதான மகாவட்டகே பிரசன்ன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைத்தோட்டம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# மின் பாவனையாளர்களுக்கு வெகுவிரைவில் நிவாரணம்

## அமைச்சர் ரவி கருணாநாயக்க உறுதி



கொழும்பு, டிசெ. 29

இலங்கை மின்சார சபையை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றிப் பாவனையாளர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

மின்சாரத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை மின்சார சபைக்குள் நிலவும் நிதி மற்றும் ஊழியர் முரண்பாடுகளை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். இத்தகைய செயற்பாட்டின்போது தொழிற்சங்கள் ஆதரவளிக்க வேண்டும்.

இவ்வாறான அனைத்துச் செயற்பாடுகளின் இறுதியில் மின்சார சபையை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதும், மின் கட்டணங்களைக் குறைத்து பாவனையாளர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதுமே எனது பிரதான இலக்கு – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஜே.வி.பி. தரப்புக்கே உரியது

அடுத்த பிரதமர் யார் என்ற அரசியல் திருவிழா நடந்து முடிந்துவிட்டது.

இப்போது எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற அரசியல் திருவிழா சூடு பிடித்திருக்கின்றது.

இதுவரை காலமும் அந்தப் பதவியை வைத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தொடர்ந்தும் அது தனக்கே உரியது என்று அடம்பிடிக்கின்றது.

கடந்த மூன்றரை வருடங்களாக நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து 'நல்லாட்சி' என்ற பெயரில் தேசிய அரசை நடத்திய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, அரசிலிருந்து வெளியேறி வந்துவிட்டது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கின்றது. எதிரணித் தரப்பில் அதிகூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தானே வைத்திருப்பதால் அந்தப் பதவி தனக்கேயுரியது என்பது அத்தரப்பின் வாதம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தனா அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மஹிந்த ராஜபக்ஷவா எதிர்க்கட்சித் தலைவர் என்பதுதான் இப்போது நடக்கும் குடுமிப்பிடிச் சண்டை.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி சட்ட ரீதியாகவும், நாடாளுமன்ற வழக்காறுகளின்படியும், தர்க்க நியாய அடிப்படையிலும் யாருக்கு வழங்கப்பட வேண்டும்? சம்பந்தனுக்கா? மஹிந்த ராஜபக்ஷவுக்கா? அல்லது பிறிதொருவருக்கா? சுவையான அரசியல் விவாதத்துக்குரிய விடயம் இது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தப் பதவி ஏன் வழங்கப்படக் கூடாது என்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறும் காரணங்கள் இரண்டு.

ஒன்று – நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக நவம்பர் மாதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்த சமயத்தில், மஹிந்த ராஜபக்ஷ பிறிதொரு கட்சிக்கு உத்தியோகபூர்வமாக மாறிவிட்டார், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மூலம் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் பட்டியலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும், பொதுஜன பெரமுன என்ற மொட்டுச் சின்னக் கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டமையால் அவர்கள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழக்கின்றனர். எம்.பியாக இருக்க முடியாதவர் எதிர்க்கட்சித் தலைவராவது எப்படி? – என்பது முதல் கேள்வி.

அடுத்து – மஹிந்தவும் அவரது சகாக்களும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலேயே இருக்கின்றனர் என்று வைத்துக் கொண்டாலும், அந்தக் கூட்டமைப்பின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி என்ற முறையில் பதவி வழியாக அரசில் தனக்குரிய பங்குக்கு மேலதிகமாக, பல அமைச்சுக்களை சுவீகரித்து வைத்திருக்கின்றார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது கூட்டமைப்பு. அப்படி மேலதிக பதவியை வைத்திருப்பதன் மூலம் ஐ.ம.சு.கூட்டமைப்பின் தலைவர் அரசில் அங்கம் வகிக்கும் போது, அதே கட்சியைச் சேர்ந்த மற்றொருவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க முடியுமா? அது சரியா? என்பதே தமிழ்க் கூட்டமைப்பின் இரண்டாவது வினாவாகும்.

இரண்டும் பொருத்தமான கேள்விகள்தாம்.

ஆனால் இந்த இரண்டாவது கேள்வி தமிழ்க் கூட்டமைப்புக்கும் பொருந்தும் என்பதை கூட்டமைப்பு மறந்தமைதான் பெரும் அரசியல் வேடிக்கை.

ஆக 103 ஆசனங்களுடன் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை இல்லாமல் தடுமாறிய ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணிக்கு எழுத்து மூலம் கூட்டமைப்பு வழங்கிய ஆதரவே அத்தரப்பு ஆட்சிக்கு உரிமை கோருவதற்கு வழி செய்தது. தமிழ்க் கூட்டமைப்பு தனது ஆதரவை வாபஸ் பெற்றால் இந்த அரசு 'அவுட்'! அதுதான் நிலைமை.

பதவியில் இருக்கும் அரசுக்குப் பெரும்பான்மை பெறுவதற்கான ஆதரவை – அரசுக்குள் இருந்து கொண்டோ அல்லது வெளியில் இருந்து கொண்டோ – வழங்கியபடி, மறுபுறத்தில் எதிர்க்கட்சியில் இருப்பதாகக் கோரி அதன் தலைமைப் பதவியைக் கேட்கலாமா?

அதாவது ஒருபுறம் ஆட்சி அமைக்கும் தரப்புக்கு அதற்குத் தேவையான பெரும்பான்மைக்கான ஆதரவும் பட்டியலில் இருந்தபடி, மறுபுறம் எதிர்க்கட்சி தரப்பிலும் உரிமை கோருவது பொருத்தமானதுதானா என்ற நியாயமான கேள்வி எழுகின்றது.

இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கையில் நாடாளுமன்றத்தில் சரியான எதிர்க்கட்சியாக – எதிர்க்கட்சிக்குரிய – சட்ட ரீதியான, தார்மீக ரீதியான உரிமையைக் கொண்ட தரப்பாக இன்றுவரை தனித்துவத்துடன் விளங்குவது ஜே.வி.பி. மட்டுமே.

தேசிய ரீதியில் எதிர்க்கட்சிக்குரிய பண்பியல்புகளுடன் அரசியல் பிரதிபலிப்புகளை வெளிப்படுத்தியபடி செயற்பட்டு வரும் ஜே.வி.பிக்கு அந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அளிப்பதுதான் முறையானது; சரியானது.

அதைச் செய்வதற்கு மஹிந்தவும், சம்பந்தனும் முன்வர வேண்டும். அதன் மூலம் தங்களின் பழுத்த அரசியல் அனுபவத்தையும் நாடாளுமன்ற பட்டறிவையும் அவர்கள் வெளிப்படுத்த வேண்டும்.

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு சட்டக் கல்வியே ஒரே தீர்வு

### கூறுகிறார் விஜயகலா

கொழும்பு, டிசெ. 29

நாட்டில் பெண்கள், சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வாகச் சட்டக் கல்வியை மாணவர்களுக்கு அடிப்படைக் கல்வியாக் கிப்பாடவிதானத்திற்குள் இணைத்துக் கொள்ள வேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதனை கொண்டுவருவதன் மூலம் தரம் 5 இல் இருந்து உயர்தர மாணவர்களுக்கு இது குறித்து விழிப்புணர்வைக் ஏற்படுத்த முடியும் என்றும், இதனால் தேசிய பாதுகாப்பும், தனிமனித பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் என்றும் கூறினார்.

கல்வி இராஜாங்க அமைச்சின் கடமைகளை நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் பொறுப்பேற்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இன்று ஐக்கிய தேசியக் கட்சி எவரது துணையுமின்றித் தனித்து ஆட்சியமைத்துள்ளது. இந்நிலையில் நாட்டுக்குத் தேவையான பல விடயங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

இடைப்பட்ட காலத்தில் தமிழ் பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை, தொண்டர் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற நியமனப் பிரச்சினைகளுக்குக் கல்வி அமைச்சருடன் கலந்தாலோசித்து தீர்வைப் பெற்றுக் கொடுப்பேன்.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் இ.ராதாகிருஷ்ணன் மலையகத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க முயற்சிகளை மேற்கொண்டார். தற்போது அவரது நோக்கத்திற்கு எவ்வித தடைகளும் ஏற்படவில்லை. நான் அவரது இலக்கை நிறைவேற்றுவேன்.

மலையக மாணவர்களின் கல்வியினை முன்னேற்றும் பொறுப்பு என்னிடம் காணப்படுகின்றது – என்றார். (ஐ)



# மகாநாயக்கர்களிடம் ஆசி பெற்றார் ரணில்!



கொழும்பு, டிசெ. 29

அரசியல் நெருக்கடிகளின் பின்னர் நேற்றுக் கண்டிக்கு விஜயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மகாநாயக்கர்களிடம் ஆசி பெற்றுள்ளார்.

நேற்றுக் காலை கண்டிக்குச் சென்ற அவர் அஸ்கிரிய பீட மஹாநாயக்கர் கலாநிதி வறகாகொட தம்மசித்தி ஸ்ரீ பஞ்ஞாநந்த தேரரையும் மல்வத்து பீட மஹாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரரையும் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் மல்வத்து மஹா விகாரையில் இடம்பெற்ற புண்ணியதானத்திலும் கலந்து கொண்டார்.

தொடர்ந்து வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகைக்குச் சென்று அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டார். தலதா மாளிகைக்கு விஜயம் செய்த பிரதமரை தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல வரவேற்றார்.

இவ்விஜயத்தில் பிரதமருடன் அமைச்சர்களான லக்ஷமன் கிரியெல்ல, தயா கமகே, ரஞ்சித் மத்தும பண்டார, இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் உடன் சென்றிருந்தனர்.

# மஹிந்தவை சந்தித்து பேசிய சீனத் தூதுவர்!

கொழும்பு, டிசெ. 29

இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷெங் சுயுவோன் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பு நேற்றுமுன்தினம் விஜேராம மாவத்தையில் உள்ள மஹிந்தவின் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது சீன ஜனாதிபதி ஷி ஜிங்பிங்கின் புதுவருட வாழ்த்துச் செய்தியைத் தூதுவர் கையளித்துள்ளார்.

மஹிந்தவுக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்ட கால நட்பு குறித்து அந்த நாட்டு ஜனாதிபதி கௌரவத்துடன் நினைவு படுத்தினார் என இந்தச் சந்திப்பின் போது தூதுவர் எடுத்துரைத்துள்ளார். (ஐ)

# ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சி



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் நேற்றைய விற்பனைப் பெறுமதி 184 ரூபா 07 சதமாகப் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த வருடம் இதுவரையான காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நூற்றுக்கு 19 சதவீதமாகச் சரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரஞ்ஜித் சொய்சா எம்.பி. பிணையில் விடுதலை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சொய்சா உள்ளிட்ட நால்வர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நால்வரையும் தலா இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு பெல்மடுல்ல நீதிவான் நீதிமன்றம் நேற்றுக் காலை உத்தரவிட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதி கொடகவெல பிரதேசத்தில் வைத்து நபர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சொய்சா உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது அவர்களை ஜனவரி முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பெல்மடுல்ல நீதிவான் நீதிமன்றம் அப்போது உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாளை

30.12.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: அத்தம் பி.ப 1.18 வரை
திதி : அட்டமி கா. 7.33 வரை
சுபநேரம் : 9.29 – 10.59 வரை
இராகுகாலம் : 4.59 – 6.29 வரை

# மத முரண்பாடுகள் வேண்டாம்

## வடக்கு ஆளுநர் குரே கோரிக்கை



மன்னார், டிசெ. 29

அனர்த்தங்களின் போது ஒன்றிணைந்து செயற்படும் மக்கள் அதன் பின்னர் இனமத வேறுபாடுகளைக் கூறி முரண்பாடுகளை தோற்றுவிப்பதாகக் கூறிய வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, எம்மிடையே மத முரண்பாடுகள் வேண்டாம் என்றும் அவர் கூறினார்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கலாசாரத் திணைக்களம் மற்றும் மாந்தை மேற்குப் பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஒளிவிழா மன்னார் மாந்தை மேற்கு நகர விளையாட்டு மைதானத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு மேலும் உரையாற்றிய அவர், முரண்பாடு இல்லாது மனிதர்கள் இருக்கவேண்டும் என மதங்கள் கூறுகின்றபோதிலும் மக்கள் மதத்தைக் கூறி முரண்படுகின்றனர்.

வெள்ளம், சூறாவளி, நெருப்பு போன்றவற்றினால் அனர்த்தம் ஏற்படும்போது அனைத்து மதத்தவரும் ஒன்றாக இருக்கின்றனர் அனர்த்தத்திலிருந்து விடுபட்டு இயல்புவாழ்க்கைக்குத் திரும்பியதும் மீண்டும் மத வேறுபாடுகளைக் கூறி முரண்படுகின்றனர்.

மதங்கள் மனித நேயத்தை மேலே வைக்குமாறு வலியுறுத்துகின்றன. நாம் அதனைப் பின்பற்றவில்லை. ஆன்மாவின் விடுதலைக்காக தெய்வத்தை நினைத்து தவம் செய்கின்றவர்கள். மதத்துக்காக வன்முறையில் ஈடுபடுகின்றனர் – என்றார்.

இந்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய இம்மானுவேல் பெர்னான்டோ, கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலன், மாந்தை மேற்குப் பிரதேச செயலர் செ.கேதீஸ்வரன் கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் சிவதாஸ், சுஜீவா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# கிளிநொச்சி மக்களுக்கு படையினர் நிவாரணம்



கிளிநொச்சி, டிசெ. 29

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்குப் படையினரால் நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் தங்கியுள்ள 200 குடும்பங்களுக்கும், கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் தங்கியுள்ள 175 குடும்பங்களுக்கும், திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தங்கியுள்ள 201 குடும்பங்களுக்கும் இவ்வாறு படையினரால் உலருணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

வேறு பல பகுதிகளிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்குப் படையினரால் பொதிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ)

# சிவனொளிபாதமலையில் கற்சரிவு

கொழும்பு, டிசெ. 29

சிவனொளிபாதமலை யாத்திரைக்குச் சென்ற யாத்திரியர்கள் மீது கற்கள் புரண்டதால், இரு யாத்திரியர்கள் காயமடைந்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு காயமடைந்தவர்கள் தங்கல்ல மற்றும் கணேமுல்ல பகுதியைச் சேர்ந்த 26,27 ஆகிய வயதுகளுடைய ஆண் ஒருவரும், பெண் ஒருவருமாவர்.

சிவனொளிபாதமலைக்குச் சென்று சமய நிகழ்வுகளை முடித்துவிட்டு மீண்டும் திரும்பும்போது, சிவனொளிபாத மலை – நல்லதண்ணி பிரதான பாதையில் மஹாகிரிதம்ப எனும் இடத்தில் பாரிய சத்தத்துடன் கற்கள் புரண்டுள்ளன.

சிவனொளிபாதமலைப் பகுதியில் மஹாகிரிதம்ப எனும் இடத்தில் கடந்த ஒரு வருடத்துக்கு முன்பு மண்சரிவு ஏற்பட்டிருந்தது. அதே இடத்திலேயே இம்முறை மீண்டும் கற்கள் புரண்டுள்ளதாக யாத்திரியர்கள் தெரிவித்தனர். (ஐ)

# பங்களாதேஷ் தேர்தலில் இம்முறை இலங்கைக் கண்காணிப்பாளர்கள்

பங்களாதேஷ் தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் இலங்கைக் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட ஒன்பது சர்வதேச அமைப்புகள் மற்றும் குழுக்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

பங்களாதேஷின் 11ஆவது ஜனாதிபதித் தேர்தல் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதன்போது, 188 சர்வதேசக் கண்காணிப்பாளர்களும், 56 சர்வதேச ஊடகவியலாளர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என பங்களாதேஷ் வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை, இந்தியா, அமெரிக்கா, மாலைத்தீவு, மலேசியா, கனடா, பூட்டான், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேசக் கண்காணிப்பாளர்களை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் ஹஸ்ரட் ஷாஹ் ஜலால் சர்வதேச விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# வெள்ளப் பாதிப்பை பார்வையிட வடக்குக்கு வருகின்றார் ராஜித

கொழும்பு, டிசெ. 29

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள மக்களைப் பார்வையிடுவதற்காக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வடக்குக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இன்று சனிக்கிழமை அவர் பயணம் மேற்கொள்வார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள வடக்கு மக்களுக்கான சுகாதார சேவைகள் செவ்வனே இடம்பெற்று வருவதை உறுதிப்படுத்துவதற்காகவும், முகாம்களில் வாழ்வோரின் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆராயவும் அவர் இன்று வருகிறார்.

இதன்போது, வடக்கு மாகாண சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவும் அவர் திட்டமிடப்பட்டுள்ளார்.

மேலும், முகாம்களில் வசிக்கும் மக்களின் சுகாதாரத் தேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்தும் அமைச்சர் கவனம் செலுத்தவுள்ளார்.

இதன்போது சுகாதார போசணைகள் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் இலங்கை மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினால் சேகரிக்கப்பட்ட உலருணவுப் பொருள்களைப் பாதிக்கப்பட்டோர் வாழும் இரண்டு முகாம்களுக்குப் பகிர்ந்தளிக்கவும் அமைச்சர் திட்டமிட்டுள்ளார்.

(ஐ)

# புத்தர் சிலை உடைத்தோர் தண்டிக்கப்படவேண்டும்!

## புத்தசாசன அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 29

நாட்டில் மதக் கலவரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்புக்களாகவே புத்தர் சிலைகள் சேதம் ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பார்க்கப்படுகின்றன. சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் உயர்ந்தபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதே முஸ்லிம் சமூகத் தலைவர்களதும் கருத்தாகவுள்ளதாக உள்ளதாகவும் புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதமர் தலைமையில் கூடி ஆராயப்பட்டது. அமைச்சர்களான கபீர் ஹாஷிம், ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

திட்டமிட்ட அடிப்படையில் இனங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சியா இது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன – என்றார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட 6 இளைஞர்களையும் எதிர்வரும் 2 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மாவனல்லை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

(ஐ)

# கொழும்புத் துறைமுகத்துக்கு சாகல கண்காணிப்பு விஜயம்



கொழும்பு, டிசெ. 29

துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் சாகல ரத்னாயக்க, கொழும்பு துறைமுகத்துக்கு நேற்றுக் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது துறைமுக அதிகார சபை தலைவரின் அலுவலகம், ஹாபர் மாஸ்டர் அலுவலகம், ஜயபாலு முனையத்தின் நிர்வாகக் கட்டடம் உள்ளடங்கலாக துறைமுகத்தில் உள்ள பல இடங்களைக் கண்காணித்தார்.

இதன்போது துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பராக்கிரம திஸாநாயக்க, இலங்கை துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவ அத்தியட்சர் அத்துல ஹேவாவித்தாரன, இலங்கை துறைமுக அதிகார சபையின் செயற்பாட்டு அத்தியட்சர் ஜயந்த பெரேரா உள்ளடங்கலாக நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

(ஐ)

# பஸ்களில் திருட்டு வீடியோ எடுப்பு பெண்கள், மாணவிகள் அவதானம்!

கொழும்பு, டிசெ. 29

தனியார் பஸ்ஸில் பயணம் செய்யும் அழகிய பெண்களையும், பாடசாலை மாணவிகளையும் கையடக்கத் தொலைபேசியில் திருட்டுத் தனமாக வீடியோ எடுத்து வந்த பஸ் நடத்துநர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபரிடமிருந்து 3 கையடக்கத் தொலைபேசிகளையும் கைப்பற்றியுள்ளதாக மீடியாகொட பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அந்த பஸ் நடத்துநர் தங்காலைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

பெண்களும் பாடசாலை மாணவிகளும் பஸ்ஸிலிருந்து இறங்கும்போது பஸ்ஸின் இறங்குபடியிலிருந்து இரகசியமான முறையில் வீடியோ எடுத்த காட்சிகளை இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளிலிருந்து பொலிஸார் பெற்றுள்ளனர்.


வெளிநாட்டவர்களுக்குக் காட்டுவதற்காக இது போன்ற காட்சிகளை பதிவு செய்வதாகவும், சில தனியார் பஸ்களில் இந்த நடைமுறை ஒரு வியாபாரமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

இதனால், பஸ்களில் செல்லும் பெண்களை அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

(ஐ)

# வாணியம்பாடியில் பொதுமக்களை தாக்கி வரும் சிறுத்தை பதுங்கியது

## பிடிக்க வலைவிரித்துக் காத்திருக்கும் வனத்துறையினர்



வேலூர், வாணியம்பாடி அருகே ஐந்து பொதுமக்களைத் தாக்கிவிட்டுப் பதுங்கியிருக்கும் சிறுத்தையை 24 மணி நேரத்திற்கும் மேலாக பிடிக்க முடியவில்லை. 3 இடங்களில் கூண்டு வைத்து பிடிக்கும் பணியில் வனத்துறை தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.சீறிப்பாயும் இந்த சிறுத்தை 24 மணி நேரத்திற்கும் மேலாக இது வரை பிடிபடவில்லை.

வேலூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே சிங்கணாங்குப்பத்தை அடுத்த நாகாலேரி என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் காலையில் அலமேலு, பாரதி என இருவரை முதலில் இந்தச் சிறுத்தை தாக்கியது. அந்தச் செய்தி பரவத் தொடங்கியதும் அக்கம் பக்கமிருந்த சுமார் 50 பேர் திரண்டு வந்து சிறுத்தை இருந்த முள்புதருக்கு தீ வைத்தனர்.

**சிறுத்தை மீது கல்வீச்சு**

இதனால்ஆத்திரமடைந்தசிறுத்தை ஆக்ரோமாக தாக்கியதில் சந்தோஷ் என்பவர் காயமடைந்தார். அவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் வனத்துறையினர் நாகாலேரிக்கு வந்து சேர்ந்தனர்.

அதேநேரம் சுமார் 1000 பேர் திரண்டு சிறுத்தை பதுங்கிய புதரை நோக்கி கல்வீச ஆரம்பித்தனர். கற்களை வீசாதீர்கள் என வனத்துறையினர் எச்சரித்தும் அவர்கள் கேட்கவில்லை.கல்வீச்சை தாங்க முடியாத சிறுத்தை மீண்டும் பாய்ந்து வந்ததும் கூட்டம் சிதறி ஓடியது. அதில் கற்களை வீசிய கமல், தண்டபாணி ஆகியோர் சிறுத்தையால் தாக்கப்பட்டு காயமடைந்தனர்.

கூட்டம் கட்டுக்கடங்காமல்போன நிலையில், சிறுத்தையைப் பிடிக்க ஒசூர் கால்நடை மருத்துவ மையத்தின் டாக்டர் பிரகாஷ் தலைமையிலான மருத்துவ குழுவினரும் வந்து சேர்ந்தனர்.

**15 கிராமங்களுக்கு எச்சரிக்கை**

காவல்துறையினர் 3 இடங்களில் மாட்டுக்கறி மற்றும் கோழியுடன் சிறுத்தையை பிடிக்க கூண்டு வைத்தனர். அதோடு துப்பாக்கி மூலம் மயக்க மருந்து செலுத்தி பிடிக்கவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் ஏரியை ஒட்டிய புதருக்குள் மறைந்திருந்த சிறுத்தை தென்படவில்லை. வியாழனன்று இரவான நிலையில் சிக்கனாங்குப்பம், அழிஞ்சிகுளம், ஈச்சங்கால், உள்ளிட்ட 15 கிராமங்களில் மக்கள் யாரும் வெளியேற வேண்டாம் என காவல்துறையினர் எச்சரித்தனர்.இரவானதால் சிறுத்தையைத் தேடும் பணி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது. ஆனாலும் வனத்துறை மற்றும் காவல்துறையைச் சேர்ந்த 50 பேர் இரவு முழுவதும் கண்காணிப்பில் ஈடுபட்டனர். சிறுத்தை தாக்கியதில் காயமடைந்த 5 பேருக்கு தொடர்ந்து சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

சுமார் 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஆந்திர வனப்பகுதியில் இருந்து சிறுத்தை வந்திருக்கக்கூடும் என தெரிகிறது. மீண்டும் நேற்றுக் காலை சிறுத்தையைத் தேடும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டிருந்தனர்.

(உ)

# ஆயிரம் கோடி ரூபா பெறுமதியுடைய 100 கிலோ போதைவஸ்து சிக்கியது!

## மும்பையில் அதிரடிச் சோதனையின்போது

இந்தியாவின் மும்பையில் இந்தியப் பணத்தில் சுமார் ரூ.1000 கோடி மதிப்புள்ள 100 கிலோ போதை மருந்து பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது.

நூறு கிலோ எடையுள்ள போதைபொருளை போதை தடுப்புப் பிரிவு பொலிஸார் கைப்பற்றி உள்ளனர். இது தொடர்பாக 4 பேரை பொலிஸார் கைது செய்து உள்ளனர்.

இது குறித்து போதை தடுப்பு பிரிவு டி.ஜி.பி. ஷிவ்தீப் லேண்டே கூறியவை வருமாறு:-

ஓர் அதிரடிச் சோதனையில் 1,000 கோடி ரூபா மதிப்புள்ள 100 கிலோ போதை மருந்தை பறிமுதல் செய்து உள்ளோம். இது மெக்ஸிகோவிற்கு ஏற்றுமதி செய்யப்பட இருந்தது. இக்கடத்தல் தொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். - இவ்வாறு அவர் கூறினார்.

# சிறுமியைக் கடத்தி பலாத்காரம் பதவியை இழந்தார் எம்.எல்.ஏ.!



சிறுமியைக் கடத்திப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவத்தில் குற்றவாளியாகக் காணப்பட்ட சட்டசபை உறுப்பினரின் பதவி அதனால் பறிக்கப்பட்டது.

பீஹாரில் லாலு பிரசாத்தின் ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சியின் நவாடா தொகுதி எம்.எல்.ஏயாக இருந்து வந்தவர் ராஜ் பல்லப் யாதவ். 2016 ஆம் ஆண்டில் 10 ஆம் வகுப்புப் படித்து வந்த சிறுமியைக் கடத்திப் பாலியல் பலாத்காரம் செய்தார் என இவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பாட்னா சிறப்பு நீதிமன்றம் ராஜ் பல்லப் யாதவ் குற்றவாளி என்று டிசெம்பர் 15 ஆம் திகதி அறிவித்தது. கடந்த 21 ஆம் திகததி அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந்நிலையில், ராஜ்பல்லப் யாதவின் எம்.எல்.ஏ பதவி பறிக்கப்பட்டுள்ளது. அந்தப் பதவியில் இருந்து அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என பீஹார் சட்டப்பேரவைச் செயலகம் அறிவித்துள்ளது.

டிசம்பர் 15 ஆம் திகதி முதல் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து பிஹார் சட்டப்பேரவையில் ராஷ்ட்ரீய ஜனதா தள எம்.எல்.ஏக்களின் பலம் 79 ஆக குறைந்துள்ளது.

# ஆயிரம் லீற்றர் கள்ளச் சாராயத்தை பொலிஸ் நிலையத்தில் எலிகள் ஏப்பம்

லக்னோ,டிசெ.29

உத்தரபிரதேச மாநிலத்தில் பொலிஸ் நிலையத்தில் பறிமுதல் செய்து வைக்கப்பட்டிருந்த 1000 லிற்றர் சாராயத்தை எலிகள் குடித்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

உத்தரபிரதேச மாநிலம் பெரேய்லி மாவட்டம் மல்காமாவில் கண்டோண்மெண்ட் பொலிஸ் நிலையம் உள்ளது.

அந்த பகுதியில் கள்ளச்சாராய புழக்கம் அதிகம் உண்டு. பொலிஸார் அடிக்கடி சோதனை நடத்தி அவற்றைப் பறிமுதல் செய்வது வழக்கமாக இருந்தது.

இவ்வாறு கடந்த 10 ஆண்டுகளாகப் பறிமுதல் செய்யப்பட்ட சாராயத்தை பொலிஸ் நிலையத்தில் பிளாஸ்டிக் கான்களில் வைத்திருந்தனர்.

இது சம்பந்தமான வழக்குகளுக்கு சான்றாக அவை தேவைப்படும் என்பதால் அவற்றை பொலிஸ் நிலையத்திலேயே வைத்திருந்தார்கள்.

அதுபற்றி பொலிஸ் நிலையப் பதிவேட்டிலும் விவரங்களை பதிவு செய்து வைத்திருந்தனர்.

இந்த நிலையில் அந்தப் பொலிஸ் நிலையத்துக்குத் தலைமை எழுதுவினைஞராக நரேஷ்பால் என்பவர் புதிதாக நியமிக்கப்பட்டார்.

அவர் பொலிஸ் நிலையத்தில் உள்ள பொருள்கள் இருப்பு பற்றி ஆய்வு மேற்கொண்டார். பதிவேட்டில் 1000 லிற்றர் சாராயம் இருப்பதாகக் குறிப்பு இருந்தது. எனவே, சாராயம் முழுமையாக இருக்கிறதா என்று அவர் ஆய்வு செய்தார். ஆனால், சாராய கான்கள் அனைத்தும் காலியாக இருந்தன. சில கான்களில் அடியில் ஓட்டைகள் காணப்பட்டன.

அந்தப் பொலிஸ் நிலையத்தில் எலிகள் நடமாட்டம் உண்டு. அந்த எலிகள் 1000 லிற்றர் சாராயத்தையும் குடித்து விட்டன எனக் கூறப்படுகிறது.

உண்மையிலேயே எலிகள்தான் குடித்தனவா? அல்லது பொலிஸாரே அவற்றைக் குடித்து ஏப்பம் விட்டு விட்டு நாடகம் ஆடுகிறார்களா? என்று தெரியவில்லை.

இது சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அபிநந்தன் சிங் உத்தரவிட்டுள்ளார். பொலிஸ் நிலைய பகுதியில் நடமாடிய அனைத்து எலிகளையும் பிடித்து விட்டோம். இனி, எலிகள் உள்ளே வராது என்றும் அவர் கூறினார்.

# மேகாலயா சுரங்கத்தில் சிக்கியோரை மீட்கும் பணி மீளவும் துரிதப்படுத்தப்பட்டது

மேகாலயா சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணி மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மேகாலயாவில், கிழக்கு ஜெண்டியா மாவட்டம் லும்தாரி கிராமத்தில் ஒரு நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. அந்தச் சுரங்கம், அனுமதி எதுவும் பெறாமல் சட்ட விரோதமாக இயங்கி வருகிறது. சுரங்கத்தின் அருகில் லிட்டின் என்ற ஆறு ஓடுகிறது.

சுரங்கத்தில் விபத்து ஏற்படும்போது, உள்ளூர் தொழிலாளர்களாக இருந்தால், உள்ளூர் மக்கள் பிரச்சினை செய்வார்கள் என்று கருதி, இந்தச் சுரங்க நிர்வாகம் வேறு மாநில தொழிலாளர்களையே பணி அமர்த்துவது வழக்கம். தற்போது, அஸாம் மாநிலத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வந்தனர் எனத் தெரிகிறது.

தொழிலாளர்கள் சுமார் 350 அடி ஆழத்துக்கு சுரங்கம் தோண்டி உள்ளனர். அடிப்பகுதிக்கு செல்லும் வழியில் கிளைகள் போன்று இருபுறமும் பிரிந்து செல்லும் வகையில் கிடைமட்டமாகவும் சுரங்கம் தோண்டி உள்ளனர்.

இந்நிலையில், கடந்த 13 ஆம் திகதி, இந்த நிலக்கரிச் சுரங்கத்துக்குள் தொழிலாளர்கள் பணியில் இருந்தபோது, அருகில் உள்ள லிட்டின் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. வெள்ள நீர், சுரங்கத்துக்குள்ளும் புகுந்தது. இதில், சுமார் 15 தொழிலாளர்கள் மாட்டிக்கொண்டனர். அவர்களை மீட்க தேசிய பேரிடர் மீட்பு படையினரும், மாநில பேரிடர் மீட்பு படையினரும், பொலிஸாரும் களத்தில் இறங்கினர்.


சுரங்கத்துக்குள் வெள்ள நீர்மட்டம் 70 அடியாக உள்ளது. தேசிய பேரிடர் மீட்புப்படையினர் 30 அடி வரை மட்டுமே நீருக்குள் இறங்க முடியும். எனவே, அந்த அளவுக்கு நீரை வெளியேற்ற முயன்றபோது, குறைந்த சக்தி கொண்ட மோட்டார்களால் தண்ணீரை வேகமாக வெளியேற்ற முடியவில்லை. அத்துடன், மழையும் பெய்ததால் கடந்த திங்கட்கிழமை மீட்புப்பணி நிறுத்தப்பட்டது.



இந்த நிலையில், அதிக சக்திவாய்ந்த இழுவைத் திறன்கள் கொண்ட மோட்டார்கள் விமானப்படைக்குச் சொந்தமான விமானம் மூலமாக மேகாலயாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மீட்பு பணியில் இந்த சக்தி வாய்ந்த மோட்டார்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

# ஆப்கனில் பலுச் விடுதலை இராணுவத்தின் மூத்த தளபதி தற்கொலைத் தாக்குதலில் பலி

## சீனத் தூதரகம் மீதான தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவராம்





குவெட்டா,டிச.29

ஆப்கானிஸ்தானில் நடந்த தாக்குதலில், பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பின் மூத்த தலைவர் பலி ஆனார்.

பாகிஸ்தானின் துறைமுக நகரமான கராச்சியில் சீன துணைத் தூதரகம் உள்ளது. இந்த துணை தூதரகத்தை தகர்ப்பதற்கு 3 தீவிரவாதிகள் கடந்த மாதம் முயற்சி செய்தனர்.

அவர்கள், அங்கு தானியங்கி துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் வந்து அதிரடி தாக்குதல் நடத்தினர். அதில் இரு பொலிஸார் பலியாகினர். தீவிரவாதிகளை எதிர்த்து, துணை இராணுவத்தினர் தீரமுடன் சண்டையிட்டனர். அதன் முடிவில் 3 தீவிரவாதிகளும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவம், கராச்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் பாதுகாப்பு படையினர், பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர்.

அதில், கராச்சி சீன துணைத் தூதரகத் தாக்குதலில், பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட பி.எல்.ஏ. என்று அழைக்கப்படுகிற பலுச் விடுதலை இராணுவத்துக்கு தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டது.

இந்த நிலையில், பலுச் விடுதலை ஈராணுவ அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள், ஆப்கானிஸ்தானில் காந்தஹார் பகுதியில் அமைந்துள்ள எய்னோ மைனா என்ற இடத்தில் உள்ள ஒரு வீட்டில் கூடி ரகசிய கூட்டம் நடத்திக்கொண்டிருந்தனர்.

அந்த வீட்டின் மீது தற்கொலைப்படை தாக்குதல் நடந்தது.

இந்த தாக்குதலில் பலுச் விடுதலை ராணுவத்தின் மூத்த தலைவரான அஸ்லம் பலுச் என்ற அச்சு கொல்லப்பட்டார்; அவருடன் மேலும் 5 முக்கிய தலைவர்களும் பலியாகி உள்ளனர் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்தத் தாக்குதல் நடந்திருப்பதை பலுச் விடுதலை ராணுவமும் உறுதி செய்துள்ளது.

இதுபற்றி அந்த அமைப்பின் செய்தி தொடர்பாளரான ஜீயந்த் பலுச் கூறுகையில், "ஆப்கானிஸ்தானில் நடந்த தாக்குதலில் அஸ்லம் கொல்லப்பட்டு விட்டார். அவருடன் இருந்த மேலும் 5 தலைவர்களும் உயிரிழந்து விட்டனர். அவர்கள், சங்கத் சர்தாரோ என்ற தஜோ, கரீம் மர்ரி என்ற ரகீம் பலுச், சங்கத் அக்தர் பலுச் என்ற ரஸ்டம், பிரீட் பலுச், சாதிக் பலுச் ஆவர்" எனக் குறிப்பிட்டார்.

இந்த தாக்குதல் குறித்து பாகிஸ்தான் அதிகாரிகள் கூறும்போது, "ஆப்கானிஸ்தானில் நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் பலியான அஸ்லம்தான், கராச்சி சீன துணை தூதரகத்தை குறிவைத்து கடந்த நவம்பர் மாதம் நடத்தப்பட்ட தாக்குதலில் மூளையாக செயல்பட்டவர். இந்தத் தாக்குதலில் படுகாயம் அடைந்த நிலையில் அஸ்லம், அங்குள்ள ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அங்கு அவர் உயிரிழந்து விட்டார்" என குறிப்பிட்டனர்.

ஆப்கானிஸ்தானில் நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் அஸ்லமும், மேலும் 5 பயங்கரவாத தலைவர்களும் பலியாகி இருப்பது பலுச் விடுதலை இராணுவ அமைப்புக்கு பலத்த பின்னடைவு ஆகும்.





ஜீன் – ஜாக்குவஸ் சவின் பயணிக்கும் கொள்கலன், கொள்கலனின் உட்பகுதி

# பெரும் பீப்பாய் கலத்தில் பயணித்து அட்லாண்டிக்கைக் கடக்கும் முயற்சி

## 71 வயது பிரெஞ்சுக்காரரின் துணிகர எத்தனம்

பிரெஞ்சுக்காரர் ஒருவர் அட்லாண்டிக் பெருங்கடலை ஓர் உருளை வடிவ செம்மஞ்சள் நிற பரல் (பீப்பாய்) மூலம் கடக்கத் தொடங்கியுள்ளார்.

படகுகளில் பொருத்தப்படும் இயந்திரம் எதுவும் இல்லாமல், பெருங்கடலின் நீரோட்டங்களை பயன்படுத்திதான் இந்த கொள்கலன் மூலம் 4500 கி.மீ. தூரத்தை இவர் கடக்கப்போகிறார்.

தேங்கியுள்ள கடல் நீருக்கு மத்தியில், ஆறு போல ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கி ஓடும் நீர்ப்பரப்பு 'பெருங்கடல் நீரோட்டம்' எனப்படும்.

பிரான்ஸைச் சேர்ந்த 71வயது ஜீன் – ஜாக்குவஸ் சவின், ஸ்பெயினின் கேனரி தீவுகளில் ஒன்றான எல் ஹியர்ரோ தீவில் இருந்து கிளம்பியிருக்கிறார். அடுத்த மூன்று மாதங்களுக்குள் கரீபியன் தீவுகளை அடையமுடியும் என அவர் நம்புகிறார்.

இந்த வலுவான கொள்கலனுக்குள் உறங்குவதற்கு தனி இடம் உள்ளது. சமையலறை மற்றும் பொருள்களை வைப்பதற்கும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அட்லாண்டிக் கடலடியின் நீரோட்டங்கள் குறித்து கடலியலாளர்கள் அறிவதற்காக, ஜீன் – ஜாக்குவஸ் சவின்தான் செல்லும் வழியில் குறிப்பான்களை போட்டுவிட்டுச் செல்வார்.

தனது பயணம் குறித்த மேலதிக தகவல்களை தனது முகப் புத்தகப் பக்கத்தில் பதிவிட்டு வருகிறார். அதன்படி கடைசியாக அவர் வெளியிட்ட ஒரு பதிவில் பரல் நன்றாக ஒத்துழைக்கிறது என்கிறார்.

ஏ.எஃவ்.பி செய்தி நிறுவனத்திடம் தொலைபேசி பேட்டியொன்றில் பேசிய ஜீன், "காலநிலை நன்றாக இருக்கிறது. மணிக்கு 2 – 3 கி.மீ. வேகத்தில் சென்று கொண்டிருக்கிறேன். ஞாயிற்றுக்கிழமை வரை சாதகமான வகையில் காலநிலை நிலவுகிறது" என்றார்.

ஜீன்-ஜாக்குவஸ் சவின் ஒரு முன்னாள் இராணுவ பாரசூட் வீரர். மேலும் வனச்சரக அலுவலராகவும், விமானியாகவும் பணியாற்றியிருக்கிறார்.

பிசின் பூசப்பட்ட தனது பிளைவுட் கொள்கலன் மூலம் 4500 கி.மீ தொலைவில் உள்ள கரீபியன் தீவுகளைச் சென்றடைய கடலடி நீரோட்டங்கள் மட்டுமே போதுமானவை என நம்புகிறார்.

இந்த பரல் சுமார் மூன்று மீற்றர் நீளம் கொண்டது. மேலும் 2.10 மீற்றர் அளவுக்கு அகலமும் ஆறு சதுர மீற்றர் அளவுக்கு தங்குமிட வசதியும் கொண்டிருக்கிறது. இதன் தரையில் கப்பல் சாளரம் உள்ளது. இதன் மூலம் கடலில் தனது கொள்கலனை கடந்து போகும் மீன்களை ஜீன் – ஜாக்குவஸால் பார்க்கமுடியும்.

இக்கொள்கலன் வலுவான அலைகளை தாங்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஆர்கா திமிங்கிலங்களின் தாக்குதல்களை சமாளிக்கும் வண்ணம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

வெளியுலக தொடர்புக்கும், ஜிபிஎஸ் வசதிக்காகவும் மின்சாரம் தேவைப்படும் என்பதால் அதற்கு தேவையான மின்சாரத்தை தயாரித்துத் தரும் வண்ணம் சோலார் பேனல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்கலனைத் தயாரிப்பதற்கு அவருக்கு தேவையான 68 ஆயிரம் டொலர்களை பலரிடமிருந்து கூட்டாக நிதி திரட்டும் திட்டத்தின் (Crowd Funding) மூலம் ஏற்பாடு செய்தார்.

அவரது கொள்கலனில் வாத்து கறி உள்ளிட்ட உணவுப் பொருள்களும், புத்தாண்டு தினத்தன்று மாலையில் குடிப்பதற்கு வெள்ளை வைன் போத்தல்களும் உள்ளன. ஜனவரி 14 ஆம் திகதி அவர் தனது 72ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்குத் தேவையான ரெட் வைனையும் கொள்கலனில் வைத்திருக்கிறார்.

அவர் செல்லும் வழியில் போடும் குறிப்பான்கள் (Marker), JCOMMOPS சர்வதேச கடல் கண்காணிப்பகத்தின் கடலியலாளர்களின் கடலடி நீரோட்டங்கள் குறித்த ஆய்வுக்கு உதவும்.

(உ)

# இந்தோனேஷியாவில் எரிமலை வெடித்துக் குமுறும் பேராபத்து!

## திரும்பவும் சுனாமிப் பேரலைகளும் தாக்கலாமாம்

இந்தோனேசியாவில் சுனாமிப் பேரலைகளை உருவாக்கிய எரிமலை மீண்டும் வெடிக்கும் ஆபத்து அதிகரித்துள்ளது என எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

இந்தோனேசியாவில் கடந்த சனிக்கிழமை இரவு எரிமலை வெடிப்பால் சுனாமி ஏற்பட்டு பேரழிவை ஏற்படுத்தியது. அங்கு ஜாவா, சுமத்ரா தீவுகளுக்கு இடையே ஜாவா கடலை, இந்தியப் பெருங்கடலுடன் இணைக்கிற சுந்தா ஜலசந்தி உள்ளது. அந்த ஜலசந்தியில் அமைந்துள்ள அனக் கிரகட்டோவா எரிமலையில் வெடிப்பு ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலச்சரிவால் இராட்சத சுனாமி அலைகள் எழுந்தன. இந்தப் பேரலைகள் அந்த நாட்டில் மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளன.

சுமத்ரா தீவில் செராங் மாவட்டம், தெற்கு லாம்பங், பாங்கமஸ் ஆகிய இடங்களில் பெருத்த உயிர்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அப்போது சுனாமி பற்றி எந்த முன்னெச்சரிக்கையும் விடப்படவில்லை.

இந்த நிலையில், அனக் கிரகட்டோவா எரிமலையை சுற்றி 5 கி.மீற்றர் தொலைவுக்கு யாரும் போக வேண்டாம் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு முன் இந்த எச்சரிக்கை 2 கி.மீட்டர் என இருந்தது.

இதேபோன்று கடலோர பகுதியில் இருந்து குடியிருப்புவாசிகளை வேறு இடங்களுக்கு செல்லும்படியும் எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. இந்த பகுதி வழியே செல்லும் விமானங்கள் வேறு வழியில் செல்வதற்கும் விமானத் துறை அதிகாரிகள் உத்தரவிட்டு உள்ளனர்.

இந்த எரிமலையில் இருந்து சாம்பல் புகை, வெப்ப வாயு மற்றும் பிற எரிமலையின் தூசுப் பொருள்கள் வானுயர பரவியுள்ளன. இதுபற்றி தேசிய பேரிடர் முகமையின் செய்தி தொடர்பு அதிகாரி பர்வோ நுக்ரஹோ, இன்னும் அதிக முறை எரிமலை வெடிப்புகள் ஏற்படும் ஆபத்து உள்ளது என கூறியுள்ளார். இதனால் மீண்டும் சுனாமிபாதிப்பு ஏற்படக்கூடும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு கண்டாவளை பிரதேச செயலர் ஊடாக அகில இலங்கை இந்து மாமன்றம் நிவாரணப் பொருள்களை கையளித்தது. மாமன்றத்தின் சார்பில் உப தலைவர் ஆறு.திருமுருகன் நேரில் கையளித்தார். (ஐ)












யாழ். பிரதேச செயலக காலசார விழா அண்மையில் யாழ். குருநகர் கலாசார மண்டபத்தில் யாழ். பிரதேச செயலர் பொ.தயானந்தன் தலைமையில் நடைபெற்றது.

யாழ் ரத்னா விருது, இளம் கலைஞர் விருது, யாழ்பாடி நூல் வெளியீடு ஆகியன இடம்பெற்றன. கிருபா லேனர்ஸ் உரிமையாளர் அழகுசுந்தரம் கிருபாகரன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

**படம் - எம்.எல்.லாபிர்**





யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், கலந்துரையாடலும் அண்மையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்ற போது பேராசிரியரும் பழைய மாணவரும் ஐக்கிய அமெரிக்காவில் வசிப்பவருமாகிய செல்லையா சிறீஸ்காந்தராசா மங்கல விளக்கேற்றி ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். பழைய மாணவ, மாணவிகளின் விளையாட்டுப் போட்டியும் இடம்பெற்றது.தொடர்ந்து மறைந்த ராஜதுரை ஆசிரியரின் உருவப் படமும் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

**படம் - எம்.எல்.லாபீர்**








வடமாகாண சுற்றுலாத்துறையின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் சுற்றுலாத்துறை இலக்கு குழுவினருக்கான கலந்துரையாடலை வடமாகாண சுற்றுலாப் பணியகமும் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனமும் இணைந்து நடத்தின. பொது நூலக கேட்போர் கூடத்தில் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் அண்மையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது. பேராசிரியர் ஏ.எஸ்.எம். அஸ்லாம் (சம்பிரகமுவ பல்கலைக்கழகம்) வளவாளராக கலந்து கொண்டார்.

**படம் - எம்.எல்.லாபிர்**







**யாழ். குருநகர் கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற ஒளிவிழாவின் காட்சிகள் சில...**

# மஹிந்தவுக்குப் பதவி இன்றேல் நாட்டில் வன்முறை வெடிக்கும்!

## எச்சரிக்கிறார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு, டிசெ.29

எதிர்க்கட்சி தலைவர் பதவியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷவை நீக்க முயற்சித்தால் வன்முறை வெடிக்கும் என மஹிந்த தரப்பினர் எச்சரித்துள்ளனர்.

அவ்வாறு ஒன்று நடந்தால் ஆட்சி முறையில் எந்த விடயம் குறித்தும் நம்பிக்கை வைக்கமுடியா தென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப் பினர் வாசுதேவ நாணாயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த எதிர்க்கட்சித் தலை வராகியவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன கோபம் அடைந் துள்ளன.

மஹிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கவில்லை என்றால், பெரும் கிளர்ச்சி ஒன்று ஏற்படும். முழுமையான ஆட்சி முறை குறித்து நம்பிக்கை இழக் கும்போது பொதுவாக கிளர்ச்சி ஒன்றே ஏற்படும். - என்றார். (ஐ)

# சுமந்திரன் எம்.பியிடம் இரட்டைக் குடியுரிமை

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு இரட்டைப் பிரஜா வுரிமை தொடர்பில் பிரச்சினை உள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கவிடம் இது தொடர்பில் வினவியபோது, எதிர்வரும் நாள்களில் இது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கை மேற் கொள்ளவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு இரட்டை பிரஜாவுரிமை தொடர்பான பிரச்சினை உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுருந்த என்பவரே முதன் முதலில் குறிப்பிட்டி ருந்தார்.

புலம்பெயர் தமிழர்களின் அவசியத்திற்கமைய சுமந்திரன் செயற்படுகிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க கூறினார்.

மஹிந்தவின் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறிப்பதாக கூறப்பட்டது. எனினும் பொதுஜன பெர முன தாங்கள் கட்சியில் மஹிந்தவுக்கு உறுப்புரிமை வழங்கவில்லை எனக் கூறினால் அந்தப் பிரச்சினை அத்துடன் நிறைவடைந்து விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மூன்று பேர் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றுள்ளனர். அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிமுதல் செய்ய உயர்நீதிமன்றத்திற்குச் செல்லப் போவதாக மஹிந்த அணி எச்சரிக்கை விடுத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியாவில் 6 கிராமங்களில் வீட்டுத் திட்டத்துக்கு அடிக்கல்

வவுனியாவில் ஆறு கிராமங்களில் வீட்டுத் திட்டங்களுக்கான அடிக்கல் நடும் விழா நேற்று இடம்பெற்றது.

'எல்லோருக்கும் வீடு' எனும் தொனிப் பொருளில் அமைந்த இவ்விழா தேசிய வீட மைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் குரூஸ் தலைமையில் இடம் பெற்றது.

இலங்கை முழுவதும் உள்ள 92 பகுதி களில் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக வவுனியா மாவட் டத்தில் சமயபுரம், சாம்பல் தோட்டம் - 1, சாம்பல் தோட்டம் - 2, ஸ்ரீராமபுரம் பெனடிக் நகர், தாஸ் நகர், இத்திக்குளம் ஆகிய 6 கிராமங்



களில் வீட்டுத்திட்டங்களுக்கான அடிக்கல் நேற்று நட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், வட. மாகாணசபை முன்னாள் உறுப்பினர் செ.மயூ ரன், வவுனியா தெற்கு பிரதேச சபை உபதவி சாளர் மகேந்திரன், ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் கருணதாஸ், மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வவுனியா சிங்களப் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆளுநருடன் பேச்சு



வவுனியா சிங்கள பிரதேச சபை தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் வடக்கு மாகாண ஆளுநர் றெஜி னோல்ட் குரேயை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

பிரதேச சபைக்கான உழவு இயந்திரச் சாரதிகள் பற்றாக் குறை, ஜே.சி.பி. ஒன்றைச் சபையின் வருமானத்தை அதி கரிப்பதற்காக கொள்வனவு செய்தல், பிரதேசங்களில் உப அலுவலங்களை அமைத்தலுக்கான நிதியை வழங் குதல் போன்ற பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக இந்தச் சந்திப் பின்போது கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கற்குவாரிகளுக்கான வரிப்பணத்தையும், போக்குவரத்து அனுமதிப் பத்திரத்துக்கான பணத்தையும் அதிகரிக்க அனுமதி அளிக்குமாறு சபையின் தலைவர் சி.பி. அலகல்ல வேண்டுகோள் விடுத்தார்.

கோரிக்கைள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றைக் கையளிக்குமாறு ஆளுநர் சபையின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிறஞ்சன், முதலமைச்சர் அமைச்சின் பதில் செயலாளர் சரஸ் வதி மோகநாதன், ஆளுநரின் செயலாளர் எல்.இளங் கோவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஐ)

# தீயில் முற்றுமுழுதாக எரிந்தது புத்தகக் கடை





யாழ்ப்பாணம், டிசெ. 29

அச்சுவேலியில் புத்தகக் கடையொன்று தீடீ ரெனத் தீப்பிடித்ததால் அங்கிருந்த பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள் என.

இந்தச் சம்பவம் அச்சுவேலி நகரிலுள்ள புத் தகக் கடையொன்றில் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது.

இந்தப் புத்தகக் கடையை நேற்றுமுன்தினம் மாலை பூட்டிவிட்டுச் சென்ற நிலையில் நேற்று அதி காலை அது எரிந்துள்ளது. இதனைத் தொடர்ந்து தீயணைப்புப் பிரிவினருக்கு தகவல் கொடுக்கப் பட்டது. அங்கு வந்த தீயணைப்புப் பிரிவினர் தீயை அணைத்துள்ளனர்.

ஆனாலும் அங்கிருந்த பொருள்களும் அந்தக் கடையும் முற்றுமுழுதாக எரிந்துள்ளன. இதனால் பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

தீ ஏற்பட்டதற்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலி ஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# இரண்டாவது தடவையாகவும் நிறைவேற்றப்பட்ட பட்ஜெட்

## பூநகரிப் பிரதேச சபையில்

கிளிநொச்சி, டிசெ. 29

பூநகரிப் பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் நேற்றைய தினம் இரண்டாவதுதடவையாகவும் பெரும் பான்மை வாக்குகளால் நிறைவேற் றப்பட்டது.

பூநகரிப் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு – செல வுத்திட்டம் கடந்த 18ஆம் திகதி சபை யில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப் புக்கு விடப்பட்டுப் பெரும்பான்மை வாக்குளால் நிறைவேற்றப்பட்டி ருந்தது. இதன்போது தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற் றும் ஐ.தே.க. உறுப்பினர் ஒருவரு மாக 14 பேர் ஆதரவாக வாக்களித்தி ருந்தனர். எதிராக ஐந்து பேர் வாக்க ளித்தனர். ஒருவர் சமுகமளிக்க வில்லை.

இந்த நிலையில் அதே வரவு – செலவுத் திட்டம் நேற்று மீண்டும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு வாக் கெடுப்புக்கு விடப்பட்டுப் பெரும் பான்மை வாக்குகளால் நிறைவேற் றப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐ.தே.க. உறுப் பினர் ஒருவருமாக 11 பேர் ஆதரவா கவும், 6 பேர் எதிராகவும் வாக்களித் ததுடன் மூவர் சமுகமளிக்கவில்லை.

இதனால் இந்த வரவு – செலவுத் திட்டம் கடந்த 18 ஆம் திகதி ஒன்பது மேலதிக வாக்குகளாலும், நேற்று ஐந்து மேலதிக வாக்குகளாலும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒரே வரவு –செலவுத் திட்டத்தை ஏன் இரண்டாவது தடவையாகவும் சபையில் சமர்ப்பித்து நிறைவேற் றியுள்ளீர்கள் எனப் பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளையிடம் வினவியபோது,

கடந்த 18 ஆம் திகதி ஐந்து உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித் தமையாலும், ஒருவர் சபைக்குச் சமுகமளிக்காது இருந்தமையாலும் நேற்று மீண்டும் சமர்ப்பித்து வாக் கெடுப்புக்கு விடப்பட்டது– என்றார்.

அவ்வாறு எனின் நேற்றும் ஆறு உறுப்பினர்கள் எதிர்த்துள்ளனர். மூவர் சபைக்குச் சமூகமளிக்க வில்லை. எனவே மீண்டும் ஒரு தடவை வரவு – செலவுத்திட்டம் சபைக் குக் கொண்டுவரப்படுமா என அவரி டம் வினவியபோது, இல்லை இன் றோடு எல்லாம் சரி என்று பதி லளித்தார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# மெல்பேர்ன் ஸ்டார்ஸ் வெற்றி




பிக் பஷ் ரி - 20 தொடரின் பத்தாவது லீக் போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

சிட்னி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணியும், சிட்னி சிக்ஸர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 130 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக ஜோர்டான் சில்க், 41 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் ஜெக்சன் கோல்மன் 3 விக்கெட்டுகளையும், சந்தீப் லேமச்சேன் மற்றும் டுவைன் பிராவோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 131 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, 14.5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 5 விக்கெட்டுகளால் வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக பீட்டர் ஹேண்ட்ஸ்கொம்ப் 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் பென் டிவார்ஷியுஸ் 3 விக்கெட்டுகளையும், ஸ்டீவ் ஓகீப் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி சார்பில், 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட பீட்டர் ஹேண்ட்ஸ்கொம்ப் தெரிவுசெய்யப்பட்டார்.

# பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் விளையாட ஸ்மித்துக்கு அனுமதி




ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ஸ்மித், பங்களாதேஷ் பிரீமியர் லீக் ரி - 20 தொடரில் விளையாடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அவர், எதிர்வரும் பங்களாதேஷ் ப்ரீமியர் லீக் ரி - 20 தொடரில், கொமிலா விக்டோரியன்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார்.

இலங்கை அணி வீரர் அசேல குணரத்னவுக்குப் பதிலாக கடந்த நவம்பர் மாதம், ஸ்டீவ் ஸ்மித்தை கொமிலா விக்டோரியன்ஸ் அணி ஒப்பந்தம் செய்திருந்தது.

எனினும், ஸ்மித்தின் பெயர் பங்களாதேஷ் பிரீமியர் லீக் வீரர்கள் வரைவில் இல்லாத காரணத்தால், அவர் விளையாட முடியாது என ஏனைய அணிகள் தெரிவித்திருந்தன.

இது தொடர்பில் ஆராய்ந்த பங்களாதேஷ் ப்ரீமியர் லீக்கின் நிர்வாகக் குழு, ஸ்மித் விளையாடுவாரா? இல்லையா? என்பது குறித்த இறுதி முடிவை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை எடுக்கும் என குறிப்பிட்டிருந்தது.

இதன்படி தங்களது முடிவை கடந்த 20ஆம் திகதி அறிவித்த பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, ஸ்டீவ் ஸ்மித்தின் ஒப்பந்தம் தொடரின், சட்டத்திட்டத்துக்கு முரணாக உள்ளது. அதனால், அவர் இம்முறை விளையாட முடியாது என அறிவித்தது.

எனினும், தற்போது ஸ்டீவ் ஸ்மித் விளையாடுவதற்கு ஏனைய அணிகள் சம்மதம் தெரிவித்துள்ளதுடன், பங்களாதேஷ் பிரீமியர் லீக்கின் வீரர்கள் ஒப்பந்தத்திலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி வீரர்கள் வரைவுக்கு வெளியில் இருந்து அணிகள் ஒரு வீரரை ஒப்பந்தம் செய்ய முடியும். இதன் காரணமாக ஸ்டீவ் ஸ்மித் மீண்டும் விளையாடுவதற்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது.

ஸ்டீவ் ஸ்மித்தின் தடை நீக்கப்பட்டமை குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாம் தொடரின் மீதுள்ள ஆர்வத்தின் அடிப்படையில் முடிவுகளை எடுத்து வருகிறோம். ஆனால் முடிவுகள் நீதியாக இருக்க வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்துகிறோம். ஆரம்பத்தில் பெரும்பான்மையான அணிகள் ஸ்மித் விளையாடுவதை ஏற்கவில்லை.

எனினும், தற்போது அணிகள் தொடரின் மீதுள்ள ஆர்வத்தால் ஸ்மித் விளையாடுவதை ஏற்றுக்கொண்டு, பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் கடிதமொன்றை வழங்கின. இதன் அடிப்படையிலேயே ஸ்மித் மீதான தடைநீக்கப்பட்டுள்ளது என்றுள்ளது.

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி முதல் பெப்ரவரி 09 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணிக்கு இமாலய இலக்கு



கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்று வரும் டெஸ்ட் போட்டியில், இலங்கை அணிக்கு 660 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நியூசிலாந்து நிர்ணயித்துள்ளது.

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்று வருகிறது. முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 178 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பின்னர் இலங்கை அணி 104 ஓட்டங்களுக்கு சுருண்டது.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய நியூசிலாந்து அணியில் தொடக்க வீரர்கள் ராவல் 74 ஓட்டங்களும், டாம் லாதம் அபாரமாக ஆடி 176 ஓட்டங்களும் குவித்தனர். பின்னர் வந்த வில்லியம்சன்(48), டெய்லர்(40) ஆகியோர் கணிசமான ஓட்டங்களை எடுத்து வெளியேறினர்.

அவர்களை தொடர்ந்து களமிறங்கிய நிக்கோலஸ், கிராண்ட்ஹோம் ஆகியோரின் அபார ஆட்டத்தினால் நியூசிலாந்து அணி 4 விக்கெட் இழப்புக்கு 585 ஓட்டங்கள் குவித்தது. நிக்கோலஸ் 162 ஓட்டங்களுடனும், கிராண்ட்ஹோம் 71 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்த போது டிக்ளேர் செய்வதாக அறிவிக்கப்பட்டது.

இதன்மூலம் இலங்கை அணிக்கு 660 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் ஆடிய இலங்கை அணி 3ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 24 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

தொடக்க வீரர்கள் குணதிலக(4), கருணரத்ன(0) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் அவுட் ஆகினர். சண்டிமல் 14 ஓட்டங்களுடனும், குசல் மெண்டிஸ் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

# நியூசிலாந்து அணியில் மீண்டும் மார்டின் கப்டில்




நியூசிலாந்து கிரிக்கெட் அணி, தற்போது சொந்த மண்ணிவல் இலங்கை அணியுடன் டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்றது.

இந்த டெஸ்ட் தொடரை முடித்துக் கொண்டு, இலங்கை அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது.

இந்நிலையில் இந்த ஒருநாள் தொடருக்கான கேன் வில்லியம்சன் தலைமையிலான 15பேர் கொண்ட நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

உபாதையில் பாதிக்கப்பட்டிருந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரரான மார்டின் கப்டில் மீண்டும் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

அதேபோல சகலதுறை வீரரான ஜேம்ஸ் நீஸம் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் டக் பிரெஸ்வெல் ஆகியோர் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இத்தொடரின் ஊடாக, விக்கெட் காப்பாளர் டிம் செய்பெர்ட் ஒருநாள் போட்டிகளில் அறிமுகம் பெறுகிறார்.

கேன் வில்லியம்சன் தலைமையிலான அணியில், டிரென்ட் போல்ட், டக் பிரெஸ்வெல், லொக்கி பெர்குசனம், மார்டின் கப்டில், மெட் ஹென்றி, கொலின் முன்ரோ, ஜிம்மி நீஸம், ஹென்றி நிக்கோல்ஸ், டிம் செய்பெர்ட், இஸ் சோதி, டிம் சவுத்தீ, ரோஸ் டெய்லர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி, எதிர்வரும் 3ஆம் திகதி, மவுண்ட் மௌனன்குய் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## பௌத்தத்துக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக்கு நேற்றுக் காலை பயணம் மேற்கொண்ட பிரதமர் தலதாமாளிகையில் விசேடபூசை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் – அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிபெற்றார்.

அதன்பிறகு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் –

அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும். தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை எந்த வொரு சந்தர்ப்பத்திலும் மாற்றியமைக்கப்படாது.

அதாவது 9 ஆவது சரத்து அவ்வாறேநீடிக்கும். ஒரு எழுத்துக் கூட மாற்றியமைக்கப்படாது. அதேபோல் ஒற்றையாட்சி முறைமையும் பாதுகாக்கப்படும். இவ்விரு உறுதிமொழிகளையும் மகாநாயக்க தேரர்களுக்கு நான் வழங்கினேன்.

அதேவேளை, புத்தர் சிலை சேதமாக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்து மாறு பொலிஸ் மற்றும் சி.ஐ.டிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்துகோவில்ஒன்றும்உடைக்கப்பட்டுள்ளதாககூறப்படுகின்றது. எனவே, அடிப்படைவாதிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் – என்றார்.(ஐ)

(மற்றொரு செய்தி 04ஆம் பக்கத்தில்)

## உயர்தரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று சனிக்கிழமை நள்ளிரவுக்குப் பின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கானநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருவதாகப் பரீட்சைகள் ஆணையாளர் சனத் பி பூஜித் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்றக.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 லட்சத்து 21 ஆயிரத்து 469 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். (ஐ)

## பாதிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சிமாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னதாக இரண்டு மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 10ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அந்த நிதிபோதாது எனவும் அந்த நிதியை 25ஆயிரம் ரூபாவாக அதிகரித்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்க வேண்டும் எனவும் இதன்போது டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

இதனிடையே இரணைமடுக் குளத்தின் நீர் முகாமைத்துவம் சீரின்மை காரணமாகவே மக்களுக்கு இவ்வாறான அனர்த்தம் ஏற்பட்டதாக சுட்டிக்காட்டிய டக்ளஸ் தேவானந்தா, துறைசார்ந்தவர்களின் அசமந்த போக்கும் கவனயீனமும் இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

இதன்போது, துறைசார்ந்த அமைச்சருடாக விரைவான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உறுதிபடத் தெரிவித்துள்ளார். (ஐ)

## இடர் பாதித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிப்பீடு நிறைவடைந்ததும் 25 லட்சம் ரூபா வரை காப்பீட்டுப் பணம் வழங்குமாறும் அவர் இதன்போது அறிவுறுத்தினார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள இடர் தொடர்பான பாதிப்புக்கள் மற்றும் மக்களுக்கான இழப்பீடுகள் – உதவிகள் தொடர்பில் ஆராய்வதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் கிளிநொச்சிக்கு வருகை தந்தார்.

இதன்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ள இடர் பாதித்த பகுதிகளை ஹெலியில் இருந்தவாறே பிரதமர் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளுடனான முக்கிய கூட்டத்தில் பிரதமர் பங்கேற்றார்.

இந்தக் கூட்டத்திலேயே பிரதமர் இந்த இழப்பீடுகள் தொடர்பில் அறிவித்தார்.

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட வீதிகள் தொடர்பில் மதிப்பாய்வு செய்து அவற்றை சீரமைக்கும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் முன்னெடுக்கவேண்டும். அதற்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்படும் என்றும் பிரதமர் உறுதியளித்தார்.

சுகாதார நிலைமைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் சுகாதாரப் பிரிவினரும் உள்ளூராட்சிச் சபைகளும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். கிணறுகளைச் சீரமைக்க கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் இந்தக் கூட்டத்தில் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்–

வெள்ள இடரால் பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டு நிர்க்கதிக்குள்ளாகியுள்ளார்கள். பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சமடைய ஏனையவர்கள் அவர்களது வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்த நிலையிலும் வீட்டை விட்டுச் செல்லாது தமது வீட்டுக்குள் தடி, மேசை போன்ற பொருட்களை அடுக்கி உயரமான நிலையை ஏற்படுத்தி அதில் தங்கியுள்ளார்கள்.

வெள்ளப் பாதிப்பால் ஏற்பட்ட மக்களின் விவரம் திரட்டப்படும் போது பாதிப்புக்குள்ளாகி வீட்டை விட்டுச் செல்லாத மக்களது விவரங்கள் விடுபடச் சந்தர்ப்பமுள்ளது. ஆகவே அவர்களையும் கருத் திற்கொண்டு அவர்களுக்கான இழப்பீட்டு நிவாரணங்களும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – என்றார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கூறிய விடயங்களும் கவனத்தில் கொள்ளப்படும். இதனைக் கிராம சேவையாளர்களும் பிரதேச செயலாளர்களும் கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும். இவ்விடயத்தை மாவட்ட அரச அதிபர் உரிய கவனமெடுத்துப் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் – என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மேலும் கூறுகையில் பாதிப்புக்குள்ளான நெல் வயல்களுக்குரிய இழப்பீடுகள், பழுதடைந்த வீதி திருத்தம், வர்த்தகப் பாதிப்பு, கால்நடைகள் இறப்பு போன்றவற்றையும் கருத்திற்கொண்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார, அமைச்சர்களான தயா கமகே, றிஷாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர்களான விஜயகலா மகேஸ்வரன், ஹர்ச டி சில்வா, அலுவத்துகொட ஆகியோருடன் குழுக்களின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறீதரன், ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறீஸ்கந்தராஜா, சிவமோகன், சித்தார்த்தன், டக்ளஸ்தேவானந்தா மற்றும் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி, புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று போன்ற பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் போன்றோரும், துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## இரணைமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே.

யாழ். பல்கலைகழக பொறியியல் பீட விரிவுரையாளர் சுப்பிரமணியம் சிவகுமார் தலைமையில் வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர்(பொறியியல்) எஸ். சண்முகநாதன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் ஆகியோர் அடங்கிய குழுவையே ஆளுநர் நியமித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி பெய்த கடும் மழையின்போது இரணைமடுகுளத்தின் நீர் கொள்ளளவு சடுதியாக உயர்ந்தபோதும் குளத்தின் வான் கதவுகள் உரிய நேரத்தில் திறக்கப்படாமையால் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது எனத் தெரிவித்து அதற்கான விசாரணைகளை முன்னெடுக்கவே இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டத்தின்போது வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, இரணைமடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள குழுவென்றை அமைக்குமாறு கோரியிருந்தார். (ஐ)

## ஹெலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலியில் இருந்தவாறே பார்வையிட்டார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள இடர் தொடர்பான பாதிப்புக்கள் மற்றும் மக்களுக்கான இழப்பீடுகள் – உதவிகள் தொடர்பில் ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் கிளிநொச்சிக்கு வருகை தந்தார்.

பிரதமருடன் அமைச்சர்கள் ரிஷாத் பதியூதீன், தயா கமகே, ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்டோரும் வருகை தந்துள்ளனர்.

இதன்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ள இடர் பாதித்த பகுதிகள் ஊடாகப் பறந்த ஹெலியில் இருந்தவாறே பிரதமர் பார்வையிட்டார். அதன் பின்னரே நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளுடனான முக்கிய கூட்டத்தில் பங்கேற்றார். (ஐ)

## இடைத்தங்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம்களையும் நேரில் பார்வையிட்டார்.

அங்கு தங்கியிருந்த மக்களுடன் உரையாடிய அவர், மக்களின் குறைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

தாம் முகாம்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மக்கள் பிரதமரிடம் எடுத்துரைத்தனர். (ஐ)

## இடரால் பாதிப்புற்றோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

1 ஆயிரத்து 528 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 906 பேர் இடர்பெயர்ந்து 19 இடைத்தங்கல் முகாங்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவாக 74 ஆயிரத்து 730 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 6 மணிவரையான நிலைவரப்படி இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 322 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 286 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் 542 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரத்து 285 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 860 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 265 குடும்பங்களைச் சேர்ந்த 807 பேர் 3 தற்காலிக முகாங்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் 82 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 681 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 331 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 4 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 7 தொழில் முயற்சிகள் அழிவடைந்துள்ளன.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 719 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 483 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் 4 வீடுகள் முழுமையாகவும் 73 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 439 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 271 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெலி ஓயா பிரதேச செயலர் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கிளிநொச்சிகரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 11ஆயிரத்து 326குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 202 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 791குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 508 பேர் 6 இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 350 வீடுகள் முழுமையாகவும் 759 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 865 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 720 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 370 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 272 பேர் 4 தற்காலிக முகாங்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தில் வெள்ளத்தால் 33 வீடுகள் முழுமையாகவும் 789வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 775 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 538 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 3 வீடுகள் முழுமையாகவும் 530 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பச்சிளைப்பளை பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 218 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 270 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 38 பேர் ஒரு தற்காலிக முகாங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 145 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மன்னார்நகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர்.

நானாட்டன் பிரதேச செயலர் பிரிவில் காற்றின் தாக்கத்தால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 257 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 642 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்கியுள்ளனர். கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். 2 தொழில் முயற்சிகள் அழிவடைந்துள்ளன.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 155 குடும்பங்களைச் சேர்ந்த 526 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 71பேர் இரண்டு இடைத்தங்கல் முகாங்களில் தங்கியுள்ளனர். அத்துடன் பிரதேசத்தில் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ஐ)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. அவர் மீண்டும் ஜனாதிபதியாகுவதற்கு நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள்.

– இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளித்தலைவரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்– மீண்டும்பதவிக்குஆசைப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு இறுதியில் தோல்வியே கிடைத்துள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி விரைவில் ஜனநாயக தேசிய முன்னணியாக உதயமாகும். ஜனநாயக தேசிய முன்னணியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குபவரே வெற்றியடைவார் – என்றார். (ஐ)

## இடரால் பாதிப்புற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை மறுசீரமைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வங்கிகளுக்குப் பணித்துள்ளார்.

அத்துடன், நாளாந்தம் அறவிடப்படும் கடன் கொடுப்பனவுகள் மற்றும் கடன் திட்டங்களுக்குள் வராத மேலதிகப் பற்றுகளை மீளச் செலுத்தும் காலத்தை ஒரு மாதத்துக்கு நீடிக்குமாறும் பிரதமர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்த நடைமுறைகள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைப் பிரதேச செயலர் ஊடாக அத்தாட்சிப்படுத்திப் பெற்றுக்கொள்ளுமாறும் வங்கிகளுக்குப் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

விவசாயக் கடன்கள் மற்றும் சிறு முயற்சிகளுக்கான கடன்களை மறுசீரமைப்பதன் ஊடாகத் தற்போதுள்ள கடன் மீளச் செலுத்துகைக் காலம் மற்றும் மாதாந்த கட்டணம் என்பன மாற்றியமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் புத்தாண்டுடன் மஹிந்த வசமாகும்

## கூறுகின்றார் சு.க. பொதுச் செயலர்

கொழும்பு, டிசெ. 29

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயம் ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும் என, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் வைத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியையும் இணைப்பதன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பான சர்ச்சையைத் தீர்க்க முடியுமா என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த அவர், எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பான சர்ச்சை ஏற்கனவே முற்றுபெற்றுவிட்டது. அதற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை நியமித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்த்துள்ளோம் – என்றார். (ஐ)

# இடர்கள் தொடர்பில் அறிவிக்க அவசர தொலைபேசி இலக்கம்




கொழும்பு, டிசெ. 29

நாடளாவிய ரீதியில் பெய்துவரும் அடை மழை காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில், இடர் நிலை குறித்து அறிவிப்பதற்கு விசேட அவரச தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவ அமைச்சினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தத் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், தமது பகுதியின் இடர் நிலை குறித்து பொதுமக்கள் 1902 என்ற விசேட தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தலாம் என அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். (ஐ)

# 2019 இல் மேலும் நெருக்கடி!

## எச்சரிக்கிறார் ஷெஹான் சேமசிங்க



கொழும்பு, டிசெ. 29

2019ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் ஸ்திரமற்ற – நெருக்கடி மிக்க ஆண்டாக அமையும்எனஎதிர்பார்ப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கையற்ற நிலை அரசின் நெருக்கடியாக மாறியுள்ளது. அது தற்போது மக்களுக்கான நெருக்கடியாகவும் மாறியுள்ளது.

மஹிந்த ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் பணியாற்றியபோதும்தமிழ்தேசியக் கூட்டமைப்பு நெருக்கடியை எதிர்நோக்கியிருந்த நிலையில், தற்போது எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமையும் கூட்டமைப்புக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது – என்றார். (ஐ)

# வடிந்து வருகிறது வெள்ள நீர் வீடுகளுக்கு திரும்பும் மக்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள மக்களில் சிலர் தத்தமது வீடுகளுக்குத் தற்காலிகமாக சென்றுவருகின்றனர்.

நேற்று அங்கு வெள்ளிக்கிழமை சீரான வானிலை நிலவியதால் வெள்ள நீர் வடிந்து வருகின்றது.

இதனை அடுத்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களில் சிலர் தமது வீடுகளுக்குத் தற்காலிகமாகச் சென்றுள்ளனர். எனினும் மக்கள் குடியிருப்புகள் தொடர்ந்தும் சேறும் சகதியுமாக காணப்படுவதுடன், வீடுகளில் கசிவுகளும் ஏற்பட்டுள்ளன.

இதன் காரணமாகச் சில பகுதிகளில் வெள்ள நீர் வழிந்தோடிய பின்னரும் மக்கள் தமது வீடுகளுக்கு மீளச் செல்ல முடியாத சூழல் உருவாகியுள்ளது. இதனால் அவர்கள் தொடர்ந்தும் அந்த முகாம்களிலேயே தங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் சுமார் 120ற்கும் மேற்பட்ட மக்கள் இவ்வாறு தற்காலிகமாக வீடுகளில் சென்று தங்கமுடியாத நிலையில், பாரதி வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர். அவர்களின் வீடுகள் வெள்ளத்தினால் சேதமாகியுள்ளமையால், அங்கு சிறுவர்கள், குழந்தைகள் வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ)

# தமிழர் நலனை நிறைவேற்ற தவறிவிட்டது கூட்டமைப்பு

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. சாடல்



கொழும்பு, டிசெ. 29

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அவர்களின் தேவைகளை நிறைவேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தாக்குதல் சம்பவமொன்றில் குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்ஸாவை நாமல் நேற்று முன்தினம் சிறைக்குச் சென்று பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து அங்கு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களின் தேவைகளைக் கருத்தில் கொள்ளாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கு அரச சார்பற்ற அமைப்புகளின் நலன்களை நிறைவேற்றும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார். (ஐ)

# தமிழ் தகவல் நடுவத்தின் சர்வதேச மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைத் தமிழருக்கு எதிரான மீறல்கள் நினைவு கூரப்பட்டன

## பிரிட்டனில் வியாழனன்று உணர்வுபூர்வ நிகழ்வு




தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களை பல்லின மக்களின் முன்னிலையில் நினைவு கூர்ந்து, தமிழ் தகவல் நடுவத்தின் சர்வதேச மனித உரிமைகள் மாநாடு நேற்று முன்தினம் பிரித்தானியாவில் நடைபெற்றது.

பல்லின மக்களின் வருகையோடு நடைபெற்ற இம் மாநாட்டில் நெருக்கடியான சூழலில் மனித உரிமைகளுக்காக உழைத்தவர்களான மனித உரிமைகள் செயற்பாட்டாளர் மறைந்த பிரான்சிஸ் சேவியர் மற்றும் கத்தோலிக்க பங்குத் தந்தை ஜேசப் மேரி ஆகியோருக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மனிதனின் உரிமைகளைப் பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் சபை உலகளாவிய ரீதியில் டிசம்பர் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினமாகப் பிரகடனப்படுத்தியதை நினைவுகூருவதோடு இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற மனித உரிமை மீறல்களை நினைவுகூர்ந்து அவற்றை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தவும் தமிழ் தகவல் நடுவம் (TIC) ஆண்டுதோறும் மேற்படி நிகழ்வை நடத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நடப்பாண்டுக்கான தமிழ் தகவல் நடுவத்தின் சர்வதேச மனித உரிமைகள் தின மாநாடு வியாழனன்று New Malden எனும் இடத்தில் நடைபெற்றது.

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் எட் டேவி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்கள், தமிழ் தகவல் நடுவத்தின் உறுப்பினர்கள் மற்றும் பல்லின மக்கள் எனப் பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்.

திருமதி சர்வா குமாரராஜாவின் தலைமையில் தமிழ் தாய் வாழ்த்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினரான எட் டேவி எம்.பி. தனது உரையில் பிரதானமாக இலங்கைக்கான ஆயுத விற்பனையை பிரித்தானிய நிறுத்த வேண்டுமென்று கோரி தமிழ் தகவல் நடுவம் முன்னெடுத்து வரும் போராட்டம் குறித்துக் கருத்து தெரிவித்திருந்தார்.

அதில் அவர், இலங்கைக்கான ஆயுத விற்பனையை நிறுத்த பிரித்தானிய அரசுக்கு முழு அளவிலான அழுத்தத்தை தான் கொடுக்கிறார் எனத் தெரிவித்தார்.

மேற்படி ஆயுத விற்பனையை நிறுத்தக்கோரும் முன்பிரேரணைக்கான (EDM) மனு எட் டேவி எம்பியின் தலைமையிலேயே கொண்டுவரப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனைத்தொடர்ந்து நெருக்கடியான சூழலில் மனித உரிமைக்காக உழைத்தவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. அதில் மனித உரிமைக்காக பெரும் பங்காற்றி மறைந்த பிரான்சிஸ் சேவியருக்கான விருதினை அவருடன் பணியாற்றிய மனித உரிமைகள் வழக்கறிஞர் அழகுராஜா பெற்றுக்கொண்டார். இலங்கையிலுள்ள கத்தோலிக்க பங்குத்தந்தை ஜோசப்மேரிக்குக்கான விருதினை அவரை நன்கறிந்த தமிழ் தகவல் நடுவத்தின் செயற்பாட்டாளர் ரேமியன் ரூபராஜன் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து பல்லின மக்களின் அவர்கள் சார்ந்த கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழ் தகவல் நடுவத்தின் உறுப்பினர் அனுராஜின் நன்றி உரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றது.

தமிழ் தகவல் நடுவத்தின் நடப்பாண்டுக்கான மேற்படி நிகழ்வினை அதன் செயலாளர் வரதகுமார் வைரமுத்து மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரம் ஆகியோர் வழிப்படுத்தியிருந்தனர். பிரதான செயற்பாட்டாளர்களாக அதன் உறுப்பினர்களான புஸ்பதரன் புத்திரகாமணி, அந்தன் தியாகராஜா மற்றும் ரேமிஜன் ரூபராஜன் ஆகியோர் கடமையாற்றினர்.

அதேவேளை, ஜெனகன் கிருஷ்ணமூர்த்தி, கஜானன் ஞானசேகரம், ஏ.நிஷாந்தி, காந்தலிங்கம் விநோதன், கிரோஜன் துரையப்பா, லலிதாரூபி வேலாயுதம்பிள்ளை, மகேந்திரலிங்கம் யோகானந், நகுலேஸ்வரன் சிவதீபன், நவரத்தினராஜ் ரட்ணராஜ், நிருஷன் விக்னேஸ்வரன், பற்றிக் அல்பேட் அல்வின் சுகிர்தன், பொன்ராசா புவலோஜன், திலக் அன்ரூஸ், ராகவன் ராசலிங்கம், பற்றிக் பீரிஸ் பிரான்சிஸ் வசந்தராஜன், ரமேஸ்கரன் மாணிக்கம், ரனித்தா தியாகேஸ், சிவகுரு சஜீபன், சஞ்சீவதனுசன் வேதநாயகம், சிவலிங்கம் சுரேந்திரராஜ், பிரஷாத் சத்தியசீலன், சுரேஷ் சுப்பிரமணியம் மற்றும் இராசேந்திரம் சுதன் ஆகியோர் இணைச் செயற்பாட்டாளர்களாகக் கடமையாற்றியிருந்தனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.